# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மாசி -06 | 18-02-2004 | புதன்கிழமை | ஓசை-365



உங்களிடம் தேவை இருக்கிறது
எங்களிடம் கைதேர்ந்த நகைத்
தொழிலாளர்கள் இருக்கின்றார்கள்.
கணேசா நகையகம்
194.கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி-9206)
123.பஜார் வீதி, வவுனியா.


# எங்கள் தலைவரின் எதிர்பார்ப்புப் போன்று

# கொள்கை ரீதியில் ஒன்றுபட்டுள்ளோம்!

## தமிழ்க் கூட்டமைப்பினருடனான நேற்றைய சந்திப்புக் குறித்து சு.ப. தமிழ்ச்செல்வன்

(அலுவலக செய்தியாளர்)

**"நாங்கள் எல்லோரும் கொள்கை ரீதியில் ஒன்றுபட்டு நிற்ப தென்று முடிவெடுத்திருக்கின்றோம். எங்களுடைய தலைவரின் எதிர் பார்ப்பும் இதுதான்" என நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின ருடன் நடத்திய சந்திப்பின் பின் செய்தியாளர்களிடம்பேசிய அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது இடம்பெறவுள்ள தேர்தல் முன்னெடுப்புக்கள் சம்பந்தமாக எங்களது தலைவரின தும் எங்களது தலைமைப் பீடத்தினதும் கரிசனைகள் சம்பந்தமாகவும், தமிழ் மக்களின் எதிர்கால அரசியல் முன்னெடுப்புக்கள் சம்பந்தமாகவும் தமிழ்க் கூட்டமைப்போடு நாங்கள் கலந்துரையாடியிருக்கின்றோம்.

கூட்டமைப்பு நான்கு கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள், செயலதிபர்கள், ஏனைய உறுப்பினர்களுடனும், கலந்துரையாடியது எங்களுக்கு மிகவும் உற்சாகமளித்துள்ளது.

எங்களது தலைவரினதும் தலைமைப்பீடத்தினதும் எங்களது மக்களது கரிசனைகளை கூட்டமைப்பினர் தங்களது கொள்கையாக ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

அந்த விடயங்கள் குறித்து நாங்கள் விவாதித்தோம். மிகவும் ஆக்கபூர்வமாகவும், பயனுள்ளதாகவும், எதிர்கால அரசியல் முன்னெடுப்புக்களை எவ்வளவு தூரம் உறுதியாக்கிக்கொள்ள முடியும்

(8ஆம் பக்கம் பார்க்க)



நேற்றைய செய்தியாளர் சந்திப்பின்போது அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தமிழ்க்கூட்டமைப்பு தலைவர் இரா.சம்பந்தன்.

## சுயாட்சி உரிமையை வலியுறுத்துவதாக எமது தேர்தல் விஞ்ஞாபனம் அமையும்

### தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்

(அலுவலகசெய்தியாளர்)

தற்போது நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் நாங்கள் ஒருதனித் தேசிய இனம் எமக்கு ஒரு தாயகம் இருக்கின்றது. எமக்கு சுயாட்சிக்கு உரித்துண்டு என்ற அடிப்படையில் தேர்தல் விஞ்ஞாபனம் அமையும் என தமிழ்க் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் புலிகளுடனான சந்திப்புப் பற்றி மேலும் கூறுகையில்,

இந்தத்தேர்தலில் என்ன கொள்கையினை முன்வைத்து போட்டியிடுவது சம்பந்தமாக நாங்கள் மிகவும் தெளிவாக ஆராய்ந்தோம். அதுவிடயம் சம்பந்தமாக முடிவு எடுத்திருக்கின்றோம். இந்த முடிகள் எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளெடுக்கப்படும் நியமனங்களின் பின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்படும்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## வாக்குச் சீட்டுகளை வடக்கிற்கு எடுத்துச் செல்வது குறித்து ஆராய்வு

எதிர்வரும் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுக்களை வடக்கிற்கு அனுப்புவது தொடர்பாக தேர்தல் ஆணையாளருக்கும், அஞ்சல்மா அதிபருக்குமிடையே நேற்று பேச்சு வார்த்தை நடைபெற்றது.

ஏ-9 வீதியூடாக வாக்குச் சீட்டுக்களை அனுப்ப முடியாதென ஏற்கனவே அஞ்சல் மா அதிபர் தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்திருந்தார். இதனூடாக அனுப்பப்படுகின்ற அனைத்துப் பொருட்களையும் புலிகள் சோதனையிடுவதால் இதற்கு வாய்ப்பில்லையென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, வாக்குச்சீட்டுக்களை வானூர்திகளில் எடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் இவ்வாக்குச் சீட்டுக்களை தனியார் விமானங்களில் கொண்டுசெல்ல முடியுமா? என்கின்ற ஓர் அச்ச நிலையும் தற்போது ஏற்பட்டுள்ளது. (32)

## சந்திரசேகரன், மனோகணேசன் தமிழ்ச்செல்வனை இன்று சந்திப்பர்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களை மலையக மக்கள் முன்னணித் தலைவரும், அமைச்சருமான பெ. சந்திரசேகரன் மற்றும் தெஸ்மாகாண சபை பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் ஆகியோர் கிளிநொச்சியில் இன்று சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர்.

இன்று காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகும் இச்சந்திப்பில் முதலாவதாக மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ. சந்திரசேகரன் அவர்களும், அதன் பின்னர் இரண்டாவது சந்திப்பில் மேல் மாகாண மக்கள் முன்ன (8ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. ம. சுதந்திர முன்னணி ஆட்சிக்குவரின் போர் நிறுத்த உடன்பாடு காலாவதியாகும்

### அபாய அறிவிப்பை வெளியிட்டுள்ளார் அமைச்சர் பீரிஸ்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்தால் நடைமுறை போர் நிறுத்த உடன்பாடு காலாவதியாகும் அபாயம் இருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் போர்நிறுத்த உடன்பாட்டை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை எனவும், அதில் திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும் எனவும் பல்வேறு சந்தர்ப்பங்களில் தெரிவித்துள்ளனர்.

சனாதிபதி இந்த போர் நிறுத்த உடன்பாட்டில் எந்தவித அடிப்படையும் இல்லை என கருத்துரைத்துள்ளார்.

போர்நிறுத்த உடன்பாட்டில் திருத்

(8ஆம் பக்கம் பார்க்க)

## போர் நிறுத்தத்தினால் தமிழ் மக்கள் பூரண நன்மையை அடையவில்லை

### பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

புலிகள் கூறியதைப் போன்று போர்நிறுத்த உடன்படிக்கையினால் வட-கிழக்கு மக்களைவிட தென் பகுதி மக்களே கூடுதலான இலாபத்தைப் பெற்றுள்ளனர். வட-கிழக்கில் சில புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இன்னும் மக்கள் இயல்புவாழ்க்கைக்கு திரும்பவில்லை. எந்த மக்களுக்காகப் போர்நிறுத்த உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டதோ அந்த மக்கள் இன்னும் அதில் பூரண நன்மையை அனுபவிக்கவில்லை ஆனால் தென்பகுதி மக்கள் தான் கூடுதலான நன்மையை அனுபவித்தனர் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

நேற்று நாட்டு மக்களுக்கு தனியார் தொலைக் கட்சியினூடாக உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கூறுகையில், கடந்த இரண்டு வருடங்களில் தனது ஆட்சியில் குறைகள், மற்றும் பிழைகள் நிகழ்த்தியிருந்தால் தான் அதனைப் பொறுப்பேற்றுக்கொள்கிறேன், இதற்காக சனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்து மக்களுக்குப் பாரிய ஒரு பழுவை சுமத்தியுள்ளார்.

பெரும்பான்மைப் பலத்தைக் கொண்ட கட்சி நாடாளுமன்றத்தில் இருக்கின்ற வேளை வரலாற்றில் முதற் தடவையாக அந்நாடாளுமன்றத்திற்கெதிராக சனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரம் மூலம் கலைத்தமை சட்டரீதியானதல்ல.

(8ஆம் பக்கம் பார்க்க)

## நாளை வெளிவருகின்றது

பதினைந்தாம் ஆண்டில் ஈழநாதம்
2004

ஈழநாதம் மக்கள் நாளிதழின் ஆண்டுச் சிறப்பிதழ் நாளை 50 பக்கங்களுடன் வெளிவருகின்றது என்பதை வாசகர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

care

# உலர்வலய விவசாயக் கருத்திட்டம் (DZADP)

## மன்னார் பிரதேச அலுவலகம்

கெயர் சர்வதேசம் இலங்கையில் முன்னணி இடத்தைப் பெற்றுள்ளதோர் அரச சார்பற்ற ஸ்தாபனம் ஆகும். பொருளாதார நிலைமைகளை மேம்படுத்தல் மற்றும் சமூகத்தில் பின்தள்ளப்படுதல் போன்ற பிரச்சினைகளை எதிர்நோக்குவது ஆகியவற்றில் அது மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

உலர்வலய விவசாயஅபிவிருத்திக் கருத்திட்டம் உயர்வலயத்தைச் சார்ந்த சிறிய அளவிலான விவசாயக் குடும்பங்கள் ஸ்திரமாகத் தம் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்த உதவுவதில் ஈடுபட்டுள்ளது. இக்கருத்திட்டம் பெண்கள் மற்றும் இளம்வயதினரை அரவணைப்பதில் விசேட கவனம் செலுத்துவதோடு சம்பந்தப்பட்ட இலங்கை அரச நிறுவனங்கள் மற்றும் பிரதேச அரசசார்பற்ற ஸ்தாபனங்களோடு இணைந்து செயற்படுகின்றது. DZADP கருத்திட்டத்துக்கு ஐரோப்பிய சங்கம் நிதி வழங்குகிறது.

இக்கருத்திட்டம் அநுராதபுரம், மொனராகலை, அம்பாந்தோட்டை மற்றும் புத்தளம் ஆகிய பெரும்பாகங்களில் 2000ஆம் ஆண்டு தொடக்கம் மும்முரமாகச் செயற்பட்டு வருகிறது. தற்போதுள்ள செயற்பாட்டைப் பலப்படுத்தவும் 2005வரை அதன் நோக்கங்களை அடைவதில் உதவுவதற்காகவும் பின்வரும் ஆளணியினர் எமக்குத் தேவைப்படுகின்றனர்.

### குழுத் தலைவர்

முழுக் கருத்திட்டத்தையும் பொதுவாகத் திட்டமிட்டுச் செயற்படுத்துவதுமுதல் மன்னார் மாவட்டத்தில் கருத்திட்டத்தின் நடவடிக்கைகளைக் கண்காணித்தல் ஆகியவற்றுக்கு குழுத்தலைவர் பொறுப்பாகவிருப்பார். பெரும்பாகத்தில் ஹுனுயுனி இன் பெறுபேறுகளை எய்துவதற்காகக் குழுத்தலைவர் 8 வேலைத்திட்ட மற்றும் 3 துணை ஆளணியினருக்குத் தலைமை தாங்குவார்.

அவள் அல்லது அவர் கருத்திட்ட நோக்க அமைப்புக்குள் விளக்கப்பட்ட கருத்திட்டத் தாக்கங்களுக்குப் பொறுப்புதாரியாக இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. பிரதான சம்பந்தப்பட்டோருடன் கலந்துரையாடி பெரும்பாக மட்டத்தில் இணைந்த ஆண்டுச் செயற்றிட்டத்தைத் தயாரிப்பது குழுத்தலைவரின் பொறுப்பாகும். அத்துடன் குடும்ப அமைப்புக்கள், வியாபார அபிவிருத்தி மற்றும் ஸ்தாபன ரீதியிலான அபிவிருத்தி/ஸ்தாபனத்தை ஸ்திரப்படுத்தல் மற்றும் நீர் வளங்களின் முகாமைத்துவம் போன்ற முக்கிய கருத்திட்ட அம்சங்களைப் பயனுறுவிதத்தில் இணைத்துச் செயற்படுத்துவதற்கும் அவர் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

அவள் அல்லது அவர் கருத்திட்டத்தின் மனித மற்றும் நிதி வளங்கள் முறையாக முகாமைத்துவப்படுத்தப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதோடு இவ்விடயங்கள் பற்றி மன்னார் கருத்திட்ட முகாமைத்துவ அலகுக்கு அவை பற்றி அறிக்கை விடுக்க வேண்டும். குறைந்த பட்சம் அபிவிருத்திக் கருத்திட்டமொன்றில் ஐந்து வருட முகாமைத்துவ அனுபவமுள்ள விவசாய அல்லது முகாமைத்துவப் பட்டதாரிகள் விண்ணப்பிக்குமாறு ஊக்குவிக்கப்படுகின்றார்கள்.

### கருத்திட்ட இணைப்பாளர்-ஸ்தாபன ரீதியிலான அபிவிருத்தி/ஸ்தாபனத்தை ஸ்திரப்படுத்தல்

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரி குழுத்தலைவரின் மேற்பார்வையின் கீழ் ஸ்தாபன அபிவிருத்தி/ஸ்தாபன ஸ்திரப்படுத்தல் (ID/OS) செயற்பாட்டுத் திட்டமொன்றைத் தேவைகளின் பகுப்பாய்வுக்கமைய அபிவிருத்தி செய்வதற்குப் பொறுப்பாகவிருப்பார்.

(ID/OS) துறையின் நோக்கங்களை அடைவதில் பாலியல் சமத்துவத்துக்கு விசேட கவனம் செலுத்தல், சம்பந்தப்பட்டோருடன் இணைந்து செயற்படுதல், பங்குதார ஸ்தாபனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தல் மற்றும் பயிற்சித்திட்டங்களைத் திட்டமிட்டுச் செயற்படுத்தும் திறமை விண்ணப்பதாரிகளுக்கு இருத்தல் வேண்டும். ஆங்கிலப் பாசைப் பாண்டித்தியம் அத்துடன் பகுப்பாய்வு மற்றும் பயிற்சித் திறமைகள் இதற்கான முற்தேவைகளாகும்.

(ID/OS) நடவடிக்கைகளில் குறைந்த பட்சம் 3வருட அனுபவம் உள்ள சமூகவியல் பட்டதாரிகள் விண்ணப்பிக்குமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

### கருத்திட்ட இணைப்பாளர்-விவசாய அமைப்புக்கள்:

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரி தேவைகள் மதிப்பீடு மற்றும் செயற்படுத்துவதற்காக விவசாயத் திட்டமொன்றை அபிவிருத்தி செய்தல் ஆகியவற்றுக்குப் பொறுப்பாகவிருப்பார். குறைந்த அளவில் புறத் தொழில்நுட்ப உட்பாய்ச்சல் மற்றும் கலந்துகொள்ளக்கூடிய தொழில்நுட்ப அபிவிருத்தி ஆகியவற்றுக்கு விசேட கவனஞ் செலுத்தி விவசாயத் துறையில் நோக்கங்களை இனங்கண்டு அபிவிருத்தித் திட்டங்களை வகுத்தல். அவள் அல்லது அவர் பின்னலமைப்பொன்றைக் கொண்டு பங்குதாரர்களுடன்/புற ஸ்தாபனங்களுடன் இணைப்புக்களை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதோடு பயிற்சித் திட்டங்களை அபிவிருத்தி செய்து நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்பாக இருக்க வேண்டும்.

உலர்வலய விவசாயத் திட்டங்களில் குறைந்த பட்சம் 3வருட நேரடி அனுபவமுள்ள விவசாயத்துறையில் பட்டம் அல்லது டிப்ளோமா உள்ளவர்கள் விண்ணப்பிக்குமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

### கருத்திட்ட இணைப்பாளர் - வியாபார அபிவிருத்தி

தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரி தேவைகள் மதிப்பீட்டை நடத்தல் மற்றும் செயற்படுத்துவதற்கான வியாபாரத் திட்ட அபிவிருத்தி ஆகியவற்றுக்குப் பொறுப்பாகவிருப்பார். ஆராய்ச்சி மற்றும் சந்தை புலனாய்வுகளுக்கான திட்டமொன்று இனங்காணப்பட்டு அமைக்கப்பட வேண்டும். சம்பந்தப்பட்டோரை ஒன்றுதிரட்டி உள்ளக மற்றும் புறத் தொடர்புகளை ஏற்படுத்தல், வியாபாரத் திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல், பயிற்சித்திட்டங்கள் மற்றும் அமைப்புக்களைத் தயாரித்து பயிற்சிநெறிகளை நடத்துதல், செயற்பாடுகள் மற்றும் பெறுமதி கூட்டல் ஆகியவற்றுக்கான அமைப்புக்களை ஏற்படுத்தல், துறைகளைக் கண்காணிப்பதை உறுதிப்படுத்தி சீர்தூக்கிப் பார்க்கும் திட்டமொன்றை அமுல்செய்தல்.

அபிவிருத்தி நடவடிக்கைகளில் குறைந்த பட்சம் 5வருட அனுபவமுள்ள விவசாயப் பொருளாதாரம் அல்லது வியாபார பரிபாலனம் ஆகியவற்றில் பட்டம் அல்லது டிப்ளோமா உள்ளவர்கள் விண்ணப்பிக்குமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

### கருத்திட்ட இணைப்பாளர்-நீர்வளங்கள் முகாமைத்துவம்

மன்னார் பெரும்பாகத்தில் நீர் வளங்கள் முகாமைத்துவ அம்சத்தின் தொடர்ச்சியான அமுலாக்கத்துக்கு நீர் வளங்கள் முகாமைத்துவத்துறை இணைப்பாளர் பொறுப்பாக இருப்பார்.

அவள் அல்லது அவர் கருத்திட்டத்தின் ஆதரவுடன் பிரதேச சமூகங்களின் குளங்கள் புனரமைப்பு முயற்சிகளை சம்பந்தப்பட்டோருடன் கலந்துரையாடி அபிவிருத்தி செய்து விசாலிப்புக்குள்ளாகும் நீர் வளங்கள் முகாமைத்துவத்தில் தலையாய பங்கினை வகிப்பார். நீர் வளங்கள் முகாமைத்துவம் தொடர்பான நடவடிக்கைகளை அமுலாக்குவதில் உதவுவதற்காக பங்காளர்கள்(இலங்கை அரச மற்றும் அரச சார்பற்ற ஸ்தாபனங்கள்) ஆகியவற்றை இனங்கண்டு ஊக்குவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் அவள் அல்லது அவர் மேற்கொள்வார். இத்துறையின் இணைப்பாளர் பங்காளர்களின் கொள்ளளவினை மேம்படுத்துவதற்குத் தோதான பயிற்சி நெறியொன்றை அமைப்பதை உறுதிப்படுத்துவதோடு அத்திட்டத்தை சரியான நேரத்தில் அமுல்செய்வதிலும் இணைந்து செயற்படுவார்.

நீர்ப்பாசன அமைப்புக்களின் புனரமைப்புக்கு மற்றும் ஒன்றிணைந்த நீர்ப்பிடிப்பு (Watershed) முகாமைத்துவத்துக்குத் தேவையான பயிற்சித் திட்டங்களுக்குத் தேவையான தொழில்நுட்ப உட்பாய்ச்சல்கள் மற்றும் வழிகாட்டலை அவள் அல்லது அவர் வழங்குவார்.

நீர்வளங்கள் அபிவிருத்தி நடவடிக்கைகளில் குறைந்த பட்சம் 4வருட அனுபவமுள்ள விவசாயம் அல்லது இயற்கை வளங்கள் முகாமைத்துவப் பட்டம் உள்ளவர்கள் விண்ணப்பிக்குமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

### கருத்திட்ட அலுவலர்கள் (4வெற்றிடங்கள்)

மன்னார் பெரும்பாகத்தில் ஹுனுயுனி இனை அமுல் செய்வதில் கருத்திட்ட அலுவலர்கள் உதவியாக இருப்பார்கள். பங்குதார ஸ்தாபனங்களுடன் மற்றும் பயன்பெறும் சமூகங்கள் குறிப்பாக, விவசாய ஸ்தாபனங்கள் ஆகியவற்றுடன் DZADP இன் புற நடவடிக்கைகளை ஒழுங்காக இணைப்பதில் அவள் அல்லது அவர் பொறுப்பாகவிருப்பார்.

தலையீடுகளுக்கான தோதான முறைமைகளைத் தேர்ந்தெடுப்பதில் துறைசார்ந்த இணைப்பாளர்களுக்கும் ஏனைய DZADP பணியினருக்கும் கருத்திட்ட அலுவலர்கள் உதவியாக இருப்பதோடு அவள் அல்லது அவர் பங்குதார ஸ்தாபனங்களுக்கான பயிற்சி நெறிகளை அமைத்துச் செயற்படுத்துவதற்கும் பொறுப்பாகவிருப்பார்.

பங்குதார இயக்கங்களின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதுட்பட பங்குதார ஸ்தாபனங்களுக்கு அவற்றின் புற நடவடிக்கைகளில் அவர் அல்லது அவள் ஆதாரமாயிருப்பார். உள்நாட்டு அரசாங்க நிறுவனங்கள் மற்றும் விவசாய இயக்கங்களுடன் உருப்படியான, அத்துடன் நட்புறவைப் பேணுவதிலும் கருத்திட்ட அலுவலர் முன்னணி வகிப்பார்.

உலர் வலய அபிவிருத்தி நடவடிக்கைகளில் குறைந்த பட்சம் 2வருட அனுபவத்துடன் விவசாயம் அல்லது சமூகவியலில் பட்டம் பெற்றோர் விண்ணப்பிக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

### நிதி மற்றும் நிர்வாக அதிகாரி-மன்னார்

கருத்திட்டத்துக்கு நிதி, நிர்வாக, செயலாளர் சேவை மற்றும் அலுவலக முகாமைத்துவ ஆதாரம் ஆகியவற்றை வழங்குவதற்குப் பொறுப்பாகவிருப்பார். வருடாந்த மற்றும் பல்வருட வரவு- செலவுத் திட்டங்கள் தயாரிப்பு அத்துடன், அவற்றின் திருத்தங்களுக்கு அவள் அல்லது அவர் பங்களிப்பை வழங்குவார். மாதாந்த அடிப்படையில் அவர் கருத்திட்ட செலவினத்தை கண்காணிப்பதோடு அவள் அல்லது அவர் வரவு- செலவுத் திட்டம் தொடர்பான முக்கிய விடயங்கள் தொடர்பாகப் பணியாளர்களுக்கு ஆலோசனை வழங்குவார்.

கணக்கியல் உயர் தொழில் துறையில் அரைச்சித்தி மற்றும் ஒத்த பதவியில் அனுபவம் விரும்பத்தக்கது. கணினி அறிவு (Word, Excel,Access, power point போன்றவை) கட்டாயமிருத்தல் வேண்டும்.

சகல பதவிகளும் மன்னாரிலேயே உள்ளதோடு கவர்ச்சியான சம்பளத்திட்டங்களும் பொதுவான கெயர் பலாபலன்களும் வழங்கப்படும். இப் பதவிகள் ஒப்பந்த அடிப்படையிலானவையாகும். இப் பதவிகளுக்கு சிறந்த தமிழ் மற்றும் ஆங்கில மொழித் தேர்ச்சி அவசியமாகும்.

தோதான தகுதியுடைய விண்ணப்பதாரிகள் சொந்தக்காரரல்லாத இரு மத்தியஸ்தர்களின் பெயர் விலாசங்களுடன் (தொடர்பு கொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கத்துடன்) இவ்வறிவித்தல் தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு விண்ணப்பங்களைத் தாக்கல் செய்ய வேண்டும். விண்ணப்பத்தில் தோதான விபரத் திரட்டு (ஆகக் கூடியது 3 பக்கங்கள் ) அத்துடன், இலங்கையில் உலர் வலய அபிவிருத்திக்கு நீங்கள் எவ்வாறு பங்களிக்க முடியும் என்பது பற்றிய ஒரு பக்கத்தைக் கொண்ட அசல் சுய விளக்கமொன்றையும் சேர்க்க வேண்டும்.


நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் கடித உறையின் இடது புற மேற்பக்கத்தில் குறிப்பிடப்பட வேண்டும். சகல விண்ணப்பங்களும் மிகுந்த இரகசியத்துடன் பேணப்படும். சகல விண்ணப்பதாரிகளுக்கும் நாம் நன்றி நவில்கிறோம். ஆனால், தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்ப தாரிகளுடன் மாத்திரமே தொடர்புகொள்வோம்.

பெண்கள் விண்ணப்பிக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

கெயர் சமவாய்ப்பினை வழங்கும் தொழிலதிபராவார்.

பணிப்பாளர்- ஆளணி அபிவிருத்தி,
கெயர் சர்வதேசம்- சிறிலங்கா,
7/A, கிறகெரீஸ் வீதி, கொழும்பு-07,
e-mail:srilanka@ care.lk

(சீ-7161)



ஈராக் யுத்தத்தை எதிர்த்தும், தமது நாட்டுப் படைகளை அங்கிருந்து வாபஸ் பெறுமாறு கோரியும் ஸ்பெயின் பார்ஸலோனாவில் ஆர்ப்பாட்டம் நடத்தும் ஸ்பெயின் மக்கள்.

# சதாம் மீதான விசாரணைகளுக்குத் தடை; இரு வருடங்களுக்குப் பின்பே சாத்தியம்!

அமெரிக்க படையினரின் வசமுள்ள ஈராக்கின் முன்னாள் சனாதிபதி சதாம் ஹுசைன் மீதான விசாரணை குறைந்தது இரண்டு வருடங்களுக்கு சாத்தியமில்லையென ஈராக்கிய சட்டத்தரணி சலெம் சலாபி தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் பத்திரிகையான கார்டியன் இது குறித்து செய்தி வெளியிட்டுள்ளது.

மனிதப் படுகொலைகள் மற்றும் மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் உட்பட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சதாமை விசாரிப்பதற்கு போர்க் குற்ற நீதி மன்றமொன்றை அமைப்பதில் பல தடைகள் இருக்கிறது என்று சதாமின் விசாரணை குறித்த நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து வரும் சலாபி கார்டியனுக்கு தெரிவித்தார்.

சதாமின் விசாரணைக்காக நீதிபதிகளை தெரிவு செய்தல், நீதி மன்றங்களை தயார்படுத்துதல், சந்தேக நபர்களை தடுத்து வைக்க மிகப்பாதுகாப்பான சிறைச்சாலைகளை உருவாக்குதல் போன்ற தேவைகள் இருப்பதாலேயே சதாமின் விசாரணையில் தடைகள் ஏற்பட்டுள்ளதாக கார்டியன் தெரிவித்துள்ளது.

# கெயிட்டியில் கிளர்ச்சியாளர் வன்முறை உச்சக் கட்டத்தை நோக்கி நகர்வு

## மையப் பகுதிக்குள் கிளர்ச்சியாளர் பிரவேசம்

**கெயிட்டியில் கடந்த பதினொரு நாட்களுக்கும் மேலாக தொடரும் ஆயுத வன்முறை உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது.**

சனாதிபதி அரிஸ்டைட்டை பதவி கவிழ்க்கப் போராடும் கிளர்ச்சியாளர்கள் கெயிட்டியின் மையப் பகுதியில் உள்ள முக்கிய நகரை ஊடுருவி உள்ளனர்.

கிளர்ச்சியாளர்களின் இந்த ஊடுருவலின் போது பொலிஸ் நிலையம் ஒன்று தாக்கப்பட்டுள்ளதோடு உயர் அதிகாரி ஒருவரும் அவரது மெய்ப்பாதுகாவலர் ஒருவரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை கெயிட்டியின் தலைநகரில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்திய அரிஸ்டைட் இந்தப் படுகொலை ஒரு வெட்கக்கேடான விடயமாகும் என்று கூறி இருக்கின்றார்.

தம்முடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு எதிர்கட்சிகளுக்கு விடுத்த வேண்டுகோளை அவர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.



ஈராக்கில் புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்ட அமெரிக்க வாகனம் துப்பாக்கிச் சூட்டி[illegible]ம், நீவைத்ததாலும் சேதமுற்றிருப்பதை அவதானிக்கும் அ[illegible]ரிக்கப் படையினர்.

# சவூதியே தீவிரவாதிகளின் அடுத்த தாக்குதல் இலக்கு!

## பிரிட்டன் எச்சரிக்கை

(லண்டன்)

தீவிரவாதிகள் அடுத்ததாக சவூதி அரேபியா மீது தாக்குதல் நடத்தக்கூடும் என பிரிட்டன் எச்சரிக்கை விடுத்துள்ளது. தீவிரவாதிகள் தாக்குதல் தொடர்பான திட்டமிடலில் இறுதிக்கட்டத்தை அடைந்து விட்டதாக பிரிட்டன் வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சவூதி அரேபியாவுக்கான அத்தியாவசிய பயணங்களைத்தவிர ஏனையவற்றை தவிர்த்துக் கொள்ளுமாறு அது ஆலோசனை வழங்கியுள்ளது.தலைநகர் றியாத்திலுள்ள மேற்குலக பொருண்மியத்தளங்கள் மீது கடந்த ஆண்டு இரண்டு தடவைகள் தாக்குதல் நடத்தப்பட்டன இந்தச்சம்பவங்களில் ஐம்பதிற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பிரான்ஸ் - இஸ்ரேல் விரிசலில் திருப்பம் மோசேகச்சாய் பிரதமர் சிராக்குடன் பேச்சு

(பாரிஸ்)

பிரான்ஸ் இஸ்ரேல் ஆகிய நாடுகள் தமக்கிடையிலான கடந்த கால கசப்புணர்வுகளை நீக்கி உறவுகளை வலுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இஸ்ரேலிய சனாதிபதி மோசேகச்சாய் பிரான்சிற்கு விஜயம் செய்துள்ளார்.

இவர் இதன்போது பிரான்சின் தலைவர் ஜக்சிராக்குடன் பேச்சுவார்த்தையையும் நடத்தியுள்ளார்.

இந்தப் பயணமானது இஸ்ரேலிய தலைவர் ஒருவர் பதினெட்டு வருடங்களின் பின்னர் பிரான்சிற்கு விஜயம் செய்தமுதல் சந்தர்ப்பமாக அமைந்துள்ளது.

பிரான்ஸில் யூதர்கள்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் மத்திய கிழக்குப் பிரச்சினை தொடர்பாக தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் என்பவைவற்றின் அடிப்படையில் இரண்டு நாடுகளுக்குமிடையில் கருத்து மோதல்கள் தோன்றி இருந்தன. ஆனால் இந்நாடுகளின் தலைவர்கள் கூட்டாக பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தியுள்ளனர்.



துருக்கியின் ஸ்தான்புல் நகருக்கு 100 மைல்களுக்கப்பால் ஏற்பட்ட பூமியதிர்ச்சியில் வீடு வாசல்களையிழந்து அகதிகளான நிலையில் காணப்படும் மக்கள்.

## இந்தியா அதிருப்தி

(புதுடெல்லி)

அமெரிக்காவின் அரசப் பணிகளை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு எதிரான புதிய அமெரிக்கச் சட்டம் குறித்து இந்தியா அதிருப்தி அடைந்துள்ளது என்று இந்திய வர்த்தக அமைச்சர் அருண்ஜெட்லி அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி றொபேட் ஷெலிக்கிடம் கூறியுள்ளார்.

இந்திய வர்த்தக அமைச்சருக்கும் அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதிக்கும் இடையில் நடைபெற்ற ஒரு மணி நேரப் பேச்சின்போது இந்த விடயம் அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதிக்கு தெரிவிக்கப்பட்டது.

*–பொலிஸ் தாக்குதலை ஆட்சேபித்து–*

# அவுஸ்.பூர்வீககுடிகள் போராட்டம் நாற்பது பொலிசாருக்கு காயம்!

(கன்பரா)

அவுஸ்திரேலியாவின் சிட்னியில் பழங்குடி மக்கள் பொலிசார் மீது நடத்திய தாக்குதலில் 40 பொலிசார்காயமடைந்துள்ளார்கள் பழங்குடி மக்கள் ஒரு புகையிரத வண்டியையும் தீ வைத்துக் கொழுத்தியுள்ளனர்.கடந்த சனிக்கிழமை 15 வயதுடைய சைக்கில் ஓட்டவீரர் தோமஸ் ஹிக்கி பொலிசார் விசாரணைக்கு என்று அழைத்துச் சென்றனர் பின்னர் படுகாயங்களுடன் தோமஸ் மீட்கப்பட்டு, வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பொலிசாரால் அழைத்துச் செல்லப்பட்ட தோமஸ் மர்மமான முறையில் கொல்லப்பட்டுள்ளார் என்று சிட்னியில் வாழும் பூர்வ குடிமக்களை பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. இதனையடுத்தே சிட்னியில் பழங்குடியினர் ஆர்பாட்டங்களில் ஈடுபட்டனர். திடீரென பொலிசார் மீது தாக்குதல் நடத்தினர் இதன் போது 40 பொலிசார் காயமடைந்துள்ளார்கள்.

# பூலான்தேவி கொலை வழக்கு சந்தேகநபர் தப்பியோட்டம்!

(புதுடில்லி)

பூலான்தேவி கொலை வழக்கில் முக்கியமாக குற்றம் சாட்டப்பட்டிருந்த சஞ்சேசிங்ரானா புதுடில்லியில் பலத்த பாதுகாப்பின் மத்தியில் இருக்கும் திகார் சிறையில் இருந்து தப்பியோடியுள்ளார்.

மேற்படிநபர் தப்பியது நேற்றுக் காலை பொலிசாருக்குத் தெரிய வந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

உத்தராஞ்சல் பொலிஸ் அதிகாரிபோல் வேடமணிந்து வந்து அவர்களது கூட்டாளிகள் சிறையில் இருந்து அவரைஅழைத்துச் சென்றுவிட்டனர்.

உத்தராஞ்சல் நீதிமன்றத்திற்கு அவரை அழைத்துச் செல்ல உத்தராஞ்சல் பொலிசார் வந்தபோது சஞ்சே தப்பிச் சென்றது தெரியவந்துள்ளது. நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த பூலான்தேவி 2001ஆம் ஆண்டு யூலைமாதம் புதுடில்லியில் அவரது அரச இல்லத்திற்கு வெளியே சுட்டுக் கொல்லப்பட்டார் ரானா உட்பட ஐந்து பேர் இந்தக் கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டிருந்தார்கள்.



சீனாவில் ஜிலின் நகரிலுள்ள சந்தைக்கட்டடத்தில் நீமூண்டதையடுத்து அந்த கட்டடத்துள் புக முயற்சி செய்யும் தீயணைப்புப் படையினர்.

# பெங்களூர் நீதிமன்ற வழக்கை மாற்றும் ஜெயலலிதாவின் கோரிக்கை நிராகரிப்பு

## உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தீர்ப்பு

(பெங்களூர்)

தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா தமக்கு எதிரான சொத்துக்குவிப்பு வழக்கு விசாரணையை பெங்களூர் நீதி மன்றத்தில் இருந்து புதுச்சேரி, ஆந்திரப்பிரதேசம் அல்லது கேரலாவிற்கு மாற்றுமாறு கேட்டு தாக்கல் செய்த மனுவை உச்ச நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பை நீதிமன்றத்தின் முன்னய உத்தரவை மாற்றுவதற்கு செல்வி ஜெயலலிதா காரணங்கள் எதனையும் சுட்டிக்காட்டவில்லை என்று நீதிபதி எஸ்.எம்.வாரிஜாவா, நீதிபதி கெஸ்பிசீமாக் அடங்கிய டிவிசன்பெஞ் கூறியுள்ளது.

ஜெயலலிதா மீதான இரண்டு சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணைகளை சென்ற நவம்பர் மாதம் உச்ச நீதிமன்றம் பெங்களூருக்கு மாற்றியது.

தமிழ்நாட்டில் நடுநிலையான விசாரணை நடத்த முடியாதென உச்ச நீதிமன்றம் சந்தேகம் வெளியிட்டது. விசாரணை நீதிமன்றம் சட்டப்படி தனது கடமைகளை நிறைவேற்றும் என்பதில் தங்களுக்கு துளியும் சந்தேகம் இல்லை என்று நீதிபதிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# கடந்த வாரத்தில்....

**9.**

* போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரொண்ட் புறூவ்ஹொவ்டே திருமலைக்கு விஜயம் செய்து இராணுவ பொலிஸ் அதிகாரிகளையும் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக்கையும் சந்தித்தார்.

* அரசியல்துறைப் பொறுப்பாளர் தலைமையிலான குழுவினர் நெதர்லாந்து அரசின் வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.



நெதர்லாந்தில் சந்திப்பு

* கிராமிய அபிவிருத்தி வங்கியின் வவுனியா கிளை அரசியல்துறை துணைபொறுப்பாளர் சோ.தங்கனால் திறந்து வைக்கப்பட்டது.

* அடுத்து வரும் நாடாளுமன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்திலிருந்து தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ,ஈ.பி.ஆர்.எல்.எப்(சுரேஸ் அணி), அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் என்பன ஒரே அணியின் கீழ் போட்டியிடுவது எனத் தீர்மானித்துள்ளன.

**10.**

* அரசியல்துறைப் பொறுப்பாளர் தலைமையிலான குழுவினர் . சுவீடன் வெளிவிவகார அமைச்சின் இராஜதந்திரிகளைச் சந்தித்துப் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களின் அவசர மனிதாபிமான தேவைகள் குறித்தும் இவற்றுக்கான சர்வதேச உதவிகள் குறித்தும் கலந்துரையாடினர்.

* கிளி.பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழா கிளி.பொன்னம்பலம் மருத்துவமனையில் சிறப்பாக நடைபெற்றது.

* சார்ஜா விமான நிலையத்திற்கு அருகில் ஈரானிய விமானம் வீழ்ந்து நொருங்கியதில் 43 பேர் பலி.

* பாக்தாத்திற்குத் தெற்கே ஸ்தான் தரியா நகரில் காவல் நிலையத்திற்கு வெளியே கார்க்குண்டு வெடித்ததில் 50 பேர் பலி, 70 ற்கும் மேற்பட்டோர் காயம்.

* போ.நி.க.குழுத் தலைவர் புறூவ் ஹொவ்டே கேணல் கருணா அவர்களைச் சந்தித்துத் தற்போதைய அரசியல் நிலைமை, யுத்தநிறுத்த உடன்படிக்கை, பொதுத் தேர்தல் போன்ற விடயங்கள் குறித்துக் கலந்துரையாடினார்.

**11.**

* கிளி.மாவட்ட கமக்காரர் அமைப்புகளின் சம்மேளனச் செயலகம் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.



செயலகம் திறப்பு

* யாழ்.மாவட்ட துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் செம்மணன், இமையவன் ஆகியோரை யாழ்.மாவட்டப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால தலைமையிலான அதிகாரிகள் சந்தித்துக் குடாநாட்டின் தற்போதைய நிலை குறித்துக் கலந்துரையாடினர்.

* போ.நி.க.குழுத் தலைவர் ரொண்ட் புறூவ் ஹொவ்டே சனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்தார்.

* ஆப்கானிஸ்தானின் தென்கிழக்குப் பிரதேசத்தில் உதவிப் புலனாய்வுத்துறை அதிகாரியாகப் பணி புரிந்த மொகமட்குசா தனது வேலைத் தளத்திற்குச் சென்று கொண்டிருந்த வேளை சுட்டுக்கொல்லப்பட்டார்.

* காஸா பிரதேசத்தில் இஸ்ரேலியப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட திடீர்த் தாக்குதலில் ஒரு பொலிஸ் அதிகாரி உட்பட எட்டு பலஸ்தீனர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

* மலையகத்தின் பிரபல தொழிற் சங்கவாதியும் அரசியல்வாதியுமான முன்னாள் பொ.ஐ.மு. பா.உறுப்பினர் வீ.புத்திரசிகாமணி இ.தொ.கா.வில் இணைந்தார்.

* குற்றச் செயல்களைத் தடுப்பதற்கான கொள்கைகளை வகுக்கும் போதும், அவற்றை நடைமுறைப்படுத்தும் போதும் அரசுக்கும், பொலிசுக்கும் மதியுரைகளை வழங்குவதற்காக 'தேசிய மதியுரை சபை' சனாதிபதி தலைமையில் நியமிக்கப்பட்டது.

**12.** * சுவிற்சர்லாந்து நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட 15 பேர் கொண்ட குழுவினர் த.வி.புலிகளின் பிரதிநிதிகள் உட்பட்ட பல தரப்பினரையும் சந்தித்து இன்றைய அரசியல் சூழ்நிலை, மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கேட்டறிந்தனர்.



சுவிஸ் பாராளுமன்ற உறுப்பினர்களுடன்

* அஸ்கிரிய மல்வத்தை மகாநாயக்கர்களைச் சந்தித்த இந்திய உயர் ஸ்தானிகர் சிறிலங்காவில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு இந்தியா பூரண ஒத்துழைப்பு வழங்கும் எனத் தெரிவித்தார்.

* ஈராக்கின் புதிய இராணுவ அலுவலகம் முன்பாக கார்க்குண்டு வெடித்ததில் 36 பேர் பலி.

* அமைச்சரவையில் அங்கம் வகித்த அமைச்சரவை அந்தஸ்து இல்லாத 27 அமைச்சர்கள், 17 பிரதி அமைச்சர்களை சனாதிபதி பதவி நீக்கம் செய்தார்.

* கைதடிப் பகுதியில் ஏ-9 வீதியில் வாகன விபத்தில் 2 பயணிகள் பலி, 23 பேர் காயம்.

* தமிழீழ காவல்துறை சீர்திருத்தப் பிரிவை சர்வதேச செஞ்சிலுவைப் பிரதிநிதிகள் பார்வையிட்டதுடன் கைதிகளையும் தனித்தனியாகச் சந்தித்துக் கலந்துரையாடினர்.



சீர்திருத்தப் பிரிவில்...

* பலஸ்தீனத்தின் காஸாப் பகுதியில் இஸ்ரேலிய இராணுவம் பெரும் எடுப்பில் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையில் 15 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர், 50க்கும் மேற்பட்டோர் பலி.

* யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள இராணுவப் பிரிவுகளில் இருந்து தெரிந்தெடுக்கப்பட்ட 4அதிகாரிகளையும் 92 சிப்பாய்களையும் கொண்ட அணியினர் மேலதிக பயிற்சிகளை முடித்து வெளியேறினர் இந்நிகழ்வில் வடபகுதி கட்டளைத்தளபதி மேஜர்ஜெனரல் சுசில் சந்திரபாலா பதக்கங்களையும் சான்றிதழ்களையும் வழங்கினார்.

**13.** * அரசியல் துறைப்பொறுப்பாளரைச் சந்தித்த முன்னாள் இத்தாலியப் பிரதம செனற்றர்பையே நிலா புரோவீரா உள்ளிட்ட குழுவினர் வடக்கு கிழக்கு மக்களுக்கான மனிதாபிமான உதவிகள் சாதகமான முறையில் பரிசீலிக்கப்படுமென உறுதியளித்தனர்.



இத்தாலியில் பரிசீலனை

* காங்கிரஸ் கட்சியும், திராவிட முன்னேற்றக்கழகமும் இருபத்தியிரண்டு வருடங்களுக்கு பின்னர் தேர்தல் கூட்டணி ஏற்பட்டபின் தி.மு.க. தலைமையகத்தில் சோனியா கருணாநிதியைச் சந்தித்தார்.



தி.மு.க – காங்கிரஸ் உறவு

*யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடங்களைப் பார்வையிட்ட சுவிஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தடைப்பட்டுள்ள சமாதான முயற்சியை முன்னெடுப்பது பற்றி ஆராய்வதாக தெரிவித்தனர்.

* சுவிஸ்லாந்து நாட்டின் அனுசரணையுடன் மன்னார், வவுனியா மாவட்டங்களில் இருந்து கண்ணிவெடி அகற்றும செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான மூன்றாவது பிரிவு பயிற்சி முடித்து வெளியேறியது.

* ஈராக்கின் பலூஜா நகரில் அமைந்துள்ள பொலிஸ் தலைமையகம், பாதுகாப்பு அலுவலகம், நகரமேயர் அலுவலகம் ஆகியவற்றை உள்ளடக்கிய பகுதியில் அமெரிக்க கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலில் 22பேர் உயிரிழந்ததுடன் 35 பேர் காயமடைந்தனர்.

* ரஷ்யாவில் கண்ணாடியினால் அமைக்கப்பட்டிருந்த நீச்சல் தடாகமொன்றின் கூரை உடைந்து விழுந்ததில் 21பேர் வரை கொல்லப்பட்டனர் 100ற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

**15.** * யாழ்.குடாநாட்டு அரசியலில் இருந்து விலகுவதாக மகேஸ்வரன் அறிவிப்பு.

* ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த அரசியல் துறைப் பொறுப்பாளர் தலைமையிலான குழுவினர் கிளிநொச்சி வந்தடைந்தனர்.



சுற்றுப் பயண முடிவில்

# தமிழ் வாக்காளர் எண்ணிக்கை அம்பாறை மாவட்டத்தில் வீழ்ச்சி!

## -முஸ்லிம், சிங்களவர் தரப்பில் அதிகரிப்பு

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் வாக்காளர் அதிகரிப்பில் வீழ்ச்சிஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டு வாக்காளர் பதிவுகளின் படி வாக்காளர் தொகை 18547 ஆக அதிகரித்துள்ள போதிலும் தமிழ் வாக்காளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாயிரத்தி ஓராம் ஆண்டில் இருந்ததைவிட இரண்டாயிரத்தி இரண்டாம் ஆண்டுத் தேர்தலில் 2536 தமிழ் வாக்காளர்கள் அதிகரித்திருந்தனர். ஆனால் தற்போது இரண்டாயிரத்தி நான்காம் ஆண்டுத் தேர்தலில் 2135 தமிழ் வாக்காளர்களே அதிகரித்துள்ளனர்.

இதேவேளை முஸ்லிம் வாக்காளர்கள் இரண்டாயிரத்தி இரண்டாம் ஆண்டில் 3333 பேராலும் இரண்டாயிரத்தி நான்காம் ஆண்டில் 9936 பேராலும் அதிகரித்துள்ளதாகவும்.

சிங்கள வாக்காளர்களின் எண்ணிக்கை இரண்டாயிரத்தி இரண்டாம் ஆண்டில் 2616 பேராலும் இரண்டாயிரத்தி நான்காம் ஆண்டில் 6367 பேராலும் அதிகரித்திருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் தமிழ் வாக்காளர்கள்401 ஆல் வீழ்ச்சி அடைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

## அடிக்கல் நாட்டல்

(வட்டக்கச்சி)

கிளி/ வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் புங்குடுதீவு 11ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நாகலிங்கம் சரவணமுத்து ஞாபகார்த்தமாக விஞ்ஞான ஆய்வுகூடத்துக்கு அடிக்கல் நாட்டுவிழா வித்தியாலய அதிபர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

அடிக்கல்லினை கல்விப் பணிப்பாளர் அரியரத்தினம் நாட்டிவைத்தார். (12)

# பெப்ரவரி மாத கலை விருந்து நாளை நடைபெற ஏற்பாடு

(அலுவலகசெய்தியாளர்)

முல்லை.மாவட்ட நுண்கலைக் கல்லூரியின் பெப்ரவரி மாதக் கலை நிகழ்ச்சிகள் நாளையதினம் புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரி கலாமுற்றத்தில் சிறப்பாக நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கல்லூரியின் தற்காப்புக்கலை மாணவர்களின் வீரநிகழ்வுகளும் க.வே.பாலகுமாரின் சமகால அரசியல் கருத்துரையும், பாட்டு, வயலின், மிருதங்கம், நடனம் போன்ற நிகழ்வுகளும் நடைபெறும்.

இவ்விசைவிருந்தில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (சோ)

# இராணுவ வண்டி மோதியது வவுனியாவில் ஒருவர் காயம்

(செட்டிகுளம்)

வவுனியா பூங்காவீதியில் இராணுவ மோட்டார் வண்டி மோதியதில் ஒருவர் சிறுகாயங்களுடன் தப்பித்தார். வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் இராணுவத்தினர் வேகமாக வந்தபோது மறு திசையில் வந்த துவிச்சக்கர வண்டியுடன் மோதியுள்ளார். இதன்போது துவிச்சக்கர வண்டியின் முன்சக்கரம் பலத்த சேதத்திற்கு உள்ளானது. எனினும் துவிச்சக்கர வண்டியில் வந்தவர் தெய்வாதீனமாகத் தப்பித்துக்கொண்டார். எனினும் சிறு காயம் ஏற்பட்டுள்ளது. (21)

# பாராளுமன்றக்கலைப்புடன் பிரச்சினைகள் தீர்ந்துவிடவில்லை

சிறிலங்காவின் 13வது பாராளுமன்றத்திற்கான தேர்தல் நியமனப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் நாள் நேற்று ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் 24ம் திகதி வரை நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்படவுள்ளன.

எதிர்பார்க்கப்பட்ட வகையில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டபோதும் இதனைத் திடீர் தேர்தல் என்றே கூறவேண்டும். ஏனெனில் பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் இன்னமும் சுமார் நான்கு வருடங்களுக்கு இருக்



கையில் தேர்தல் வரும் ஏப்ரலில் நடைபெற இருக்கின்றது. 2000ஆம் ஆண்டு நடைபெற்ற 11வது பாராளுமன்றத்திற்கான தேர்தலில் பொதுசன ஐக்கிய முன்னணி வெற்றி பெற்றபோது அது குறுகிய ஆயுளில் கலைக்கப்படுவதற்கான அறிகுறி காணப்படவில்லை. ஆனால் பொ.ஐ.மு.வுக்குள்ளேயே எழுந்த மனமுறிவுகள், விரக்திகள் அதன் ஆயுட்காலத்தை ஒரு வருடமாக குறுக்கியது.

இப்போது 05-12-2001 தேர்தலில் தெரிந்தெடுக்கப்பட்ட 12வது பாராளுமன்றம் தேர்ந்தெடுக்கப்பட்ட அன்றே ஒரு வருட ஆயுள் மட்டும் குறிக்கப்பட்டது. சனாதிபதியின் கட்சிக்கு மாற்றுக்கட்சி ஒன்று பாராளுமன்றத்தைக் கைப்பற்றுமானால், என்ன நடைபெறும் என வாய்ப்புப் பார்க்கும் ஒரு சந்தர்ப்பமாக இது அமைந்தது. அரசியலமைப்புக்கு உட்பட்டவகையில் அல்லது சந்திரிகா அம்மையார் இதுவரை காலம் கூறி வந்தது போல "சகவாழ்வு அரசியலை" உண்மையிலேயே மேற்கொள்ளக்கூடிய அல்லது தேசப்பற்றுள்ள தலைவர்களைக் கொண்ட நாடொன்றில் இவ்வாறான நிலை ஏற்பட்டிருப்பின் 12வது பாராளுமன்றம் தனது 6வருட ஆயுளைப் பூர்த்தி செய்திருக்கக்கூடும்.


ஆனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் ஒரு வருடத்தில் பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் இருக்கையில் அவ்வாறு ஒரு வருட ஆயுள் குறிப்பிடப்பட்டதில் எவ்வித அதிசயமும் இல்லை. எனினும் இரண்டு வருடங்களை 12வது பாராளுமன்றம் தாண்டியது. இக்காலப்பகுதியில் பாராளுமன்றத்தைக் கலைக்காது கைப்பற்ற அதாவது ஐ.தே.மு.விலிருந்து சிலரைக் கிளப்ப- சந்திரிகா குமாரதுங்க எடுத்த முயற்சி வெற்றி தரவில்லை. தேர்தல் ஒன்றை நடத்தி வெற்றி கொள்வதற்கான சூழ்நிலையும் தோன்றவில்லை.

இப்பொழுது கூட்டணி ஒன்று அமைக்கப்பட்டு விட்டதாயினும், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு பாராளுமன்றத்தைக் கலைக்க பூரண விருப்பம் இல்லை என்றும் கூட்டணியினரின் வற்புறுத்தலுக்கு இணங்கவே பாராளுமன்றத்தைக் கலைத்தாரென்றும் தென்னிலங்கை அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர். அது உண்மையாக இருப்பினும்கூட சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கஅரசாங்கத்தை நெருக்கடிக்குள் தள்ளி எவ்வாறாயினும் அதன் ஆயுளை விரைந்து முடித்துவிடும் நோக்கத்துடன் செயற்பட்டு வந்தார். எனவே அதன்ஆயுள் இவ்வாறு வற்புறுத்தல் இல்லாவிடினும் அற்பமானதே என்பதும் வெளிப்படையாகும்.

ஆனால் சிறிலங்காவில் அரசாங்கமொன்று பெரும்பான்மை பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவிருந்தும் பிரதமரின் விருப்பமின்றி அற்ப ஆயுளில் கலைக்கப்பட்டது இதுவே முதற் தடவையாகும்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அரசியல் அமைப்பு ரீதியாக அதிகாரமிருப்பினும் தார்மீக ரீதியாக அவருக்கு அதற்கான அருகதையில்லை. ஏனெனில் பாராளுமன்றத்தையும் மக்களே தெரிவு செய்திருக்கின்றனர். அதைக்கலைக்க மக்கள் எவ்வகையிலும் கூடகோரவில்லை.

இதேவேளை அரசியல் அமைப்பு ரீதியாக பாராளுமன்றத்தை அவர் கலைத்திருந்தாலும் பின்னர் அமைச்சரவையில் அங்கம் பெறாத அமைச்சர்களை நீக்கியமை பிரதமரின் ஆலோசனையின்றி புதிய அமைச்சர்களை நியமித்தமையெல்லாம் அரசியலமைப்புக்கு



உட்பட்டதா? என்பதெல்லாம் கேள்விக்குரியவையே. அவற்றுக்கான தீர்ப்பைப் பெறுவதானால் உயர்நீதிமன்றம் தான் செல்ல வேண்டும்.

ஆனால் உயர்நீதி மன்ற பிரதம நீதியரசர் மீது ஐக்கிய தேசிய முன்னணிக்கு இருக்கும் அபிப்பிராயம் காரணமாக அது அங்கு செல்ல முயலமாட்டாது என்றே கூறலாம்.

எது எவ்வாறாயினும் தேர்தல் முடியும் வரை சனாதிபதி சந்திரிகா அரசியலமைப்பை காரணமாக வைத்து எடுக்கும் நடவடிக்கைகளை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர வேறு வழியில்லை.

ஆனால், தேர்தல்களம் எவ்வாறு இருக்கும்? அது வழமையைப் போல வன்முறை மிக்கதாகவே இருக்கும் என பலரும் அஞ்சுகின்றனர். சில தேர்தல் வன்முறைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளமை அதனை வெளிப்படுத்துகிறது. முன்னரிலும் பாரதூரமான வன்முறைகள் இடம் பெறலாம் எனவும் சிலர் கூறுகின்றனர்.

இரு பிரதான அணிகளும் தற்பொழுது செய்து வரும் பிரச்சாரம் ஒருவரை ஒருவர் எவ்வளவு தூரம் தரம்தாழ்த்த முடியுமோ அவ்வளவுக்கு தரம்தாழ்ந்ததாகவே அமைந்திருக்கிறது. இது வன்முறையை மேலும் தவிரப்படுத்தக்கூடும். அத்துடன் முறைகேடுகளும் பெருமளவில் இடம் பெற வாய்ப்புண்டு. தேர்தலை அவதானிக்க பல்வேறு நாடுகளின் கண்காணிப்புக்குழுக்கள் வருகைதந்துள்ளன. எனினும் முறைகேடுகளில் ஈடுபடுவோருக்கு தண்டனை வழங்கும் அதிகாரமும் முறைகேடுகளில் ஈடுபடுவோரிடமே இருப்பதால் இதனால் பலனேதும் உண்டா என்பது சந்தேகமே.

ஐக்கிய தேசிய முன்னணி சுமார் இரண்டாண்டுகள் பதவியிலிருந்தாலும் அதன் செயற்பாடுகள் இறுதி ஓராண்டும் முடக்கமடைந்த நிலையிலேயே இருந்து வந்தது. அதிலும் அது கடந்த மூன்று மாதங்களாக முற்றாகச்செயலிழந்திருந்தது. ஒரு வேளை தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி வெற்றிபெற்றாலும் ஆட்சியமைக்க செயற்பட எத்தனை மாதங்கள் எடுக்கும்? செயற்பட சந்திரிகா அனுமதிப்பாரா என்ற கேள்விகள் எல்லாம் எழுகின்றன.

**- வேலவன் -**

# பொதுமக்கள், பொலிசார் பரஸ்பரம் பொலிஸ் ஆணைக்குழுவில் முறைப்பாடு!

(கொழும்பு)

பொலிஸார் பொலிஸ் திணைக்களத்திற்கு எதிராகவும், பொது மக்கள் பொலிசாருக்கு எதிராகவும் பொலிஸ் அணைக்குழுவிற்கு முறைப்பாடுகளைச் செய்துள்ளனர்.

ஆணைக்குழு தனக்கு கிடைத்துள்ள அனைத்து முறைப்பாடுகளையும், விசாரணைகளுக்கு எடுத்துள்ளதாக ஆணைக் குழு அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

தமது கடமைகளைச் சரிவரச் செய்யாதவர்கள், பக்கச் சார்பான விசாரணைகள், பொலிஸ் அச்சுறுத்தல், அவமானம், மற்றும் உளவியல் ரீதியில் பாதிப்படைதல் உட்பட பல குற்றச்சாட்டுக்கள் பொது மக்கள் தரப்பிலிருந்து முறையிடப்பட்டுள்ளதாகவும், பதவி உயர்வு, கொடுப்பனவு, திடீர் இடமாற்றம், பழிவாங்கல்,

தொடர்ந்தும் கஷ்டப் பிரதேசக்கடமை, சுகயீனலீவு, சலுகைவழங்குதலில் பாரபட்சம், போன்ற நடவடிக்கைகள் தொடர்பாக பொலிசாரும் ஏராளமான முறைப்பாடுகளை வழங்கியுள்ளதாக ஆணைக்குழு அதிகாரி கூறியுள்ளார்.

– புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய –

# பங்குனி உத்தரப் பொங்கல் விழா ஆலோசனைக் கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

எதிர்வரும் ஏப்பிரல் மாதம் 4ஆம் திகதி நடைபெறவிருக்கும் கிளிநொச்சி கரைச்சி புளியம் பொக்கணைநாகதம்பிரான் ஆலய ஆண்டுற்சவப் பங்குனி உத்தரப் பொங்கல் விழா தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் ஒன்று நாளை மறுதினம் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இக்கூட்டம் கிளிநொச்சி மாவட்ட அரசஅதிபர் இராசநாயகம் தலைமையில் ஆலயமுன்றலில் நடைபெறும்.

இதில் அனைவரும கலந்து கொண்டு ஆலோசனை வழங்கி விழா சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (சோ)

# தென்னிலங்கை அரசியல் குழப்பத்தைப் புறம்தள்ளி எமது மக்களின் தரமுயரப் பாடுபட வேண்டும்

## -வவுனியா அரசியல் துறைப் பொறுப்பாளர் அழைப்பு

(செட்டிகுளம்)

இன்று நென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் சூழலானது குழப்பமாக உள்ளது. இதனை நாம் பார்த்துக்கொண்டு இருப்பதால் எந்தவிதமான பயனும் இல்லை. எனவே, எமது மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் வாழ்வின் விழுமியங்களையும் பாதுகாப்பது மிக முக்கியமான ஒன்று. இதற்காக நாம் அனைவரும் பெண்கள் அமைப்புக்களுடன் இணைந்து செயற்படுவது காலத்தின் தேவை. இவ்வாறு வவுனியா மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் செல்வி அலை தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தின் தேசிய எழுச்சிப் பேரவைகளை மீளக்கட்டி எழுப்பும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இதனை வவுனியா அரசியல் துறையினர் செய்துவருகின்றனர்.

கடந்த ஞாயிறன்று வவுனியாவின் பெரிய கோமரசன் குளம் தேசிய எழுச்சிப் பேரவையின் கூட்டம் தேசிய எழுச்சி பேரவையின் தலைவர் யோகநாதன் தலைமையில் நடைபெற்றது. பொதுச்சுடரினை வவுனியா மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் அலை ஏற்றினார். தேசியக் கொடியினை கோவில்க்குளம் பொறுப்பாளர் தமிழ்மாறன் ஏற்றினார். ஈகச்சுடரினை மாவீரரின் தந்தையார் ஏற்றினார்

சிறப்புரைகளினை வவுனியா மாவட்ட தேசிய எழுச்சி பேரவையின் தலைவர் எஸ்.என்.ஜீ. நாதன்,வவுனியா மாவட்ட அரசியல்த்துறைப் பொறுப்பாளர் எழிலன்,மகளிர் பொறுப்பாளர் அலை ஆகியோர் நிகழ்த்தினர். இதன் பின்னர் கடந்த மாத அறிக்கை ஆராயப்பட்டுள்ளது. (21)

# நிலைமைகளைஅவதானித்தே சனாதிபதி செயற் பட்டார்

## - அலரி மௌலானா கூறுகிறார்

(கொழும்பு)

நாட்டின் பொருளாதார நிலைமை வடக்கு கிழக்கின் செயற்பாடுகள் என்பவற்றை கவனமாக அவதானித்தபின்பே சனாதிபதி பாராளுமன்றத்தை கலைத்தார் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அலரிமௌலானா வெள்ளியன்று கொழும்பில் நடந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சிக் கூட்டத்தில் தெரிவித்தார்.

கடந்த இரண்டுமாதங்களில் அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளது இதனால் நடுத்தரம் மற்றும் வருமானம் குறைந்த குடும்பத்தினர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அவர்மேலும் தெரிவித்தார்.

# பல்கலை வளாகத்தை அமைக்க நிதியுதவி பெற முயற்சி

கிழக்குப் பல்கலைக்கழகத் திருகோணமலை வளாகத்தை, நிலாவெளியில் கோணேசபுரி என்னுமிடத்தில் ஒதுக்கப்பட்டுள்ள 250 ஏக்கர் காணியில் அமைப்பதற்கு தேவையான நிதி உதவியை உலகவங்கி மற்றும ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றிடமிருந்து பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக திருகோணமலை மாவட்டமுன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

ஏற்கனவே உலகவங்கியின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்டுடன் இதுகுறித்து தான் பேசியிருப்பதாகவும்அவர்கூறினார். (25)

# ஆசிய ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கான அனுமதி கதிர்காமரால் காரணமின்றி ரத்து

கொழும்பில் இருந்து இயங்கும் ஆசிய ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு ஏ.பி.சீ. வழங்கப்பட்டிருந்த தொலைக்காட்சி ஒலிபரப்புக்கான அனுமதியை தகவல்துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ரத்துச் செய்துள்ளார்.

சூரியன் எவ். எம். கோல்ட் எவ். எம், ஹிரு எவ். எம். உள்ளிட்ட ஐந்து வானொலி ஒலிபரப்புகளை கொண்டு இயங்கிவந்த ஆசிய ஒளிபரப்புக் கூட்டுத்தாபனம் வெகு விரைவில் தொலைக்காட்சி ஒளிபரப்புக்களை மேற்கொள்ளவிருந்தது. இந்த நிலையிலேயே காபந்து தகவல்துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அதன் அனுமதியை ரத்துச் செய்துள்ளார்.

இதற்காக எந்தவொரு காரணமும் கூறப்படவில்லை. இதனால் இந்த அனுமதி ரத்தை எதிர்த்து ஆசிய ஒளிபரப்புக் கூட்டுத்தாபனம் நேற்று முன்தினம் உயர் நீதிமன்றத்தில் அடிப் படை உரிமை மீறல் வழக்குதாக்கல் செய்துள்ளது. அத்துடன் தகவல் துறை அமைச்சின் ரத்துக்கு எதிராக தடை உத்தரவும் கொழும்பு மாவட்ட நீதிமன்றில் கோரப்பட்டுள்ளது. (32)

-வடக்கு-கிழக்கு மாகாணத்தில்-

# சிறிலங்காப் படையினரின் ஆக்கிரமிப்பால் 156 பாடசாலைகள் முற்றாக இயங்கவில்லை

**வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சிறிலங்காப் படையினரின் செயற்பாடுகளால் 156 பாடசாலைகள் முற்றுமுழுதாக இயங்கவில்லை. அத்தோடு 144 பாடசாலைகள் தற்காலிகமாக வேறு இடங்களில் இயங்கி வருகின்றன.**

உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினைகள், கடந்தகால போர் நடவடிக்கைகள் காரணமாக வடகிழக்கில் தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள இரண்டாயிரத்து எட்டுப் பாடசாலைகளில் 156 பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாகவும் 144 பாடசாலைகள் தற்காலிகமாக வேறு இடங்களில் இயங்கி வருவதாகவும் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் புள்ளி விபரம் தெரிவித்துள்ளது.

தீவக வலயத்தில் 76 பாடசாலைகளில் 30 பாடசாலைகள், வலிகாமம் வலயத்தில் 15 உப பாடசாலைகளில் 21 பாடசாலைகள், திருமலை வலயத்தில் 80 பாடசாலைகளில் 15 பாடசாலைகள், மன்னார் வலயத்தில் 119 பாடசாலைகளில் 11 பாடசாலைகள், தென்மராட்சி வலயத்தில் 68 பாடசாலைகளில் 10 பாடசாலைகள், வவுனியா வலயத்தில் 88 பாடசாலைகளில் 22 பாடசாலைகள், மடுவலயத்தில் 41 பாடசாலைகளில் ஐந்து பாடசாலைகள், துணுக்காய் வலயத்தில் 54 பாடசாலைகளில் ஐந்து பாடசாலைகள் என்பன தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

இப்பாடசாலைகளில் பெரும்பாலானவை உயர் பாதுகாப்பு வலயம் காரணமாகவும், பாடசாலைகளுக்கு அண்மையில் இராணுவ முகாம்கள் அமைந்துள்ளதாலுமே மூடப்பட்டுள்ளன.

# சப்பாத்து அணிய காலே இல்லையென்பது போன்றதே வடக்கு-கிழக்கு பாடசாலைகளின் நிலை!

-நிக்கோட் திட்டப் பணிப்பாளர்-

(திருமலை)

காலுக்குச் சப்பாத்து தேவை என்ற நிலை ஒருபுறம்,சப்பாத்து அணிய காலே இல்லாத நிலை மறுபுறம். இவ்வாறு காலே இல்லாத பள்ளிக்கூடங்கள் தான் வடக்கு-கிழக்கு மாகாணத்தின் கிராமப்புறங்களில் காணப்படுகின்றன. இவ்வாறு வடக்கு-கிழக்கு சமுதாய மீளளிப்பு அபிவிருத்தித் திட்ட (நிக்கோட்) த்தின் திட்டப் பணிப்பாளர் ரி.லங்காநேசன்,திருகோணமலை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியில் கிராமப்புற மாணவிகள் தங்கி உயர்கல்வி பெறுவதற்கு உதவுமுகமாக நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிக்கட்டடத்திறப்பு நிகழ்வில் கௌரவ விருந்தினராக பங்கு பற்றி பேசும் போது தெரிவித்தார்.

மேலே பார்த்தால் வானம் தெரிகிறது. சூரியனின் பிரகாசம், கீழே மண்தரை. தரையில் அமர்ந்திருந்து படிக்கும் நிலையை வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பல இடங்களில் சந்தித்துள்ளேன் மரத்தின் கீழ் நிழலில் செல்லும் இடமெல்லாம் வகுப்பறையாக்கி மாணவர்களுக்குக் கற்பித்தல், கிராமப்புறங்களில் மேற்கொள்ளப்படுவதையும் பார்த்திருக்கின்றேன். இவ்வாறான நிலவரம் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இனியும் இருக்கக்கூடாது.

இதனால், எமது நிக்கோட் நிறுவனம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் கல்வித்துறைக்கு முதலிடம் கொடுத்து வடக்கு கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் கல்வி அபிவிருத்தி திட்டச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது என்றும் திட்டப்பணிப்பாளர் தெரிவித்தார்.

நிக்கோட் கிராமப்புற பாடசாலைகளின் அபிவிருத்திக்குத் தான் முக்கியத்துவம் அளித்து வருகின்றது. கல்வி அபிவிருத் தித்திட்டச் செயற்பாட்டில் இது பத்தாவது திறப்பு நிகழ்வு. இன்னும் 11 திறப்பு நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன என்றும் திட்டப் பணிப்பாளர் தெரிவித்தார். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன்,க.துரைரெட்ணசிங்கம் ஆகியோர் இதில் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.


'கலை கலைக்காகவே'

## நுண்கலைக் கல்லூரிகளின்

'பெப்ரவரி மாதக் கலை விருந்து'

**இடம்:-** புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரிக் கலாமன்றம்

**காலம்:-** 19-02-2004 வியாழன்-மாலை4.00மணி

**நிகழ்வுகள்**

கல்லூரி மாணவர்களின் தற்காப்புக்கலை, வாய்ப்பாட்டு நிகழ்ச்சிகள், சங்கீத பூஷணம் திரு.ச. பாலசிங்கம் அவர்களின் தமிழிசை அரங்கு, இசைஞான சுரபி நாச்சிமார் கோவிலடி திரு-அ.ஜெயராமன் குழுவினரின் வயலின் ஷோலோ, திரு-க.வே.பாலகுமாரன் அவர்களின் சமகால அரசியல் கருத்துரை,கல்லூரி நடனப்பிரிவு மாணவிகளின் நாட்டிய அளிக்கைகள்,இன்னும் பல....

கலை விருந்தருந்த அனைவரும் வருக

(4245) -நுண்கலைக் கல்லூரியினர்-



## கழகங்களுக்கு அழைப்பு

(மல்லாவி)

துணுக்காய் பிரதேசசெயலகப் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப்போட்டி மார்ச் மாதம் 01ம் கிழமையில் நடைபெற விருப்பதால் துணுக்காய்ப்பிரதேச விளையாட்டுக் கழகத்தலைவர், செயலாளர்கள் எதிர்வரும் 24.02.2004 செவ்வாய்க்கிழமை மு.ப 10.30 மணிக்கு துணுக்காய் பிரதேச செயலகத்தில் விளையாட்டுப் போட்டி தொடர்பாக நடைபெறவுள்ள கலந்துரையாடலுக்கு சமுகமளிக்குமாறு துணுக்காய்ப் பிரதேசச் செயலர் திருமதி ப.தியாகராஜா கேட்டுக் கொள்கின்றார். (24)



உ

சிவமயம்

## நாகதம்பிரான் நல்லருள் நாடெங்கும் பாலிக்குக

கரைச்சி

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய ஆண்டுற்சவ பங்குனி உத்தரப் பொங்கல் [4-04-2004] சம்பந்தமான ஆலோசனைக் கூட்ட அறிவித்தல்

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய ஆண்டுற்சவப் பொங்கல் விழா (4-04-2004) ஞாயிற்றுக்கிழமை வழமை போன்று நடைபெறவுள்ளது. இப்பொங்கல் விழா சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் 20-02-2004 வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரும் ஆலயக் காப்பாளருமாகிய உயர் திரு தி.இராசநாயகம் அவர்கள் தலைமையில் ஆலய முன்றலில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்திற்குக் கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் காவல்துறைப் பொறுப்பதிகாரிகள், தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதான உறுப்பினர்கள், போக்குவரவுக் கழப் பொறுப்பாளர்கள், திணைக்களத் தலைவர்கள், கிராமசேவை அலுவலர்கள், கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர், பொது முகாமையாளர்கள்,செஞ்சிலுவைச் சங்க உத்தியாகத்தர்கள் மற்றும் பலர் கலந்துகொள்ளவிருப்பதால் நாகதம்பிரான் தொண்டர்கள்,பக்தர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் கலந்து விழா சிறப்பாக நடைபெற ஆலோசனைகளையும் ஒத்துழைப்புக்களையும் நல்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

இவ்வண்ணம்
நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபையினர்
புளியம்பொக்கணை..

(சி-9094)



## 1ஆம் ஆண்டு நினைவு மீட்டல்

தோற்றம் 18 - 10 - 1961



மறைவு 18 - 02 - 2003

## சு.அன்ரன் விஜயகுமார்

[சின்னையா]

எம் அன்பின் உறைவிடமே-சின்னையா
என எல்லோராலும் அன்போடு அழைக்கப்பட்டவனே
வல்லோன் உமை அழைத்து ஓராண்டு ஆனதையா
காலங்கள் பல கடந்தாலும் ஆறாதையா எம்துயர்.

இன்று இவரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன விருந்தில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி,பிள்ளைகள்,
தாய்,சகோதரர்கள்,
உற்றார் , உறவினர்,
நண்பர்கள்

தகவல்:-
அன்ரனி தேவரூபன்

செல்வபுரம்,
முல்லைத்தீவு.

(3986)



## மீண்டெழும் பச்சிலைப்பள்ளி பளை நகரில்

மக்கள் நலனை மையமாகக் கொண்டு

## இளந்தென்றல் வாணிபத்தினரால்

மற்றும் ஓர்

# இளந்தென்றல் தங்ககம்

இணைந்த குளியல் அறைகளுடன் கூடிய தங்கும் அறைகள் மற்றும் நவீன வசதிகளுடன் 18.02.2004 இன்று- நண்பகல் 12.00 மணிக்கு இளந்தென்றல் தங்ககம் யாழ்.நெடுஞ்சாலை பளை நகரில் திறந்து வைக்கப்பெறவுள்ளது.

(சி-8793)



## சிந்தனைக்கு

இயற்கை எனது நண்பன்; வாழ்க்கை எனது தத்துவாசிரியன்; வரலாறு எனது வழிகாட்டி.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 18-01-2004

## அனைத்தும் நிராகரிப்பு!

யுத்தநிறுத்தம், சமாதானப் பேச்சுவார்த்தைகள் என்பனவற்றிற்குத் தாம் எதிரானவர்கள் அல்ல எனத் தெரிவிக்கும் ஜே.வி.பி.யினர் படிப்படியாக கடந்த இரண்டாண்டுகாலத்தில் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள் அவற்றில் காணப்பட்ட முன்னேற்றங்கள் என்பனவற்றைப் படிப்படியாக நிராகரிக்கத் தொடங்கியுள்ளனர்.

முதலில் ஜே.வி.பி நோர்வே அரசினை சமாதான முயற்சிகளின் ஏற்பாட்டாளர் என்ற நிலையில் இருந்து நிராகரித்தது. நோர்வே விடுதலைப் புலிகளுக்குச் சார்பாகச் செயற்படுவதாகவும், இலங்கையில் பொருளாதார அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ள முற்பட்டு நிற்பதாகவும் குற்றம் சாட்டியது. அத்தோடு, தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் நோக்கில், நோர்வேக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களையும் நடத்தியது. நோர்வேயின் தேசியக் கொடியை எரித்தது.

அடுத்ததாக பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கென விடுதலைப்புலிகள் முன்வைத்த-இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்கான திட்டத்தையும் அது நிராகரித்துள்ளது. இதன் மூலம் பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதற்கான சந்தர்ப்பத்தையே நிராகரித்துள்ளதெனலாம்.

அதுமட்டுமல்ல இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பான விடயத்தில் இதுவரையில் பேசுவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ள சமஷ்டி ஆட்சி முறையையும் அது நிராகரித்துள்ளது. அதன் அதிகாரப்பகிர்வு மட்டம் மிகவும் கீழ் மட்டத்தில் உள்ள நிர்வாக அலகுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளது.

இறுதியாக விடுதலைப் புலிகளுக்கும் -ஐ.தே.முன்னணி அரசாங்கத்திற்கும் இடையில் கையொப்பம் இடப்பட்டது. தற்பொழுது அமுலில் இருப்பதுமான யுத்தநிறுத்த உடன்பாட்டை ஜே.வி.பி. நிராகரித்துள்ளது. ஜே.வி.பி.யின் பிரச்சாரச் செயலாளரான விமல்வீரவன்ச, அரசாங்கத்தின் விடுதலைப்புலிகளுடனான தற்போதைய போர் நிறுத்த உடன்பாடு தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருப்பதாகக் கூறியுள்ளார்.

இந்த வகையில் பார்க்கையில் கடந்த இரண்டாண்டு காலத்தில் இடம்பெற்ற சமாதான முயற்சிகள் மற்றும் யுத்தநிறுத்த ஒழுங்குகள் யாவற்றையும் ஜே.வி.பிநிராகரித்துள்ளது. ஆனால், ஜே.வி.பி.யின் இந்நிராகரிப்பிற்கான காரணங்கள் எத்தகைய வலுவுள்ளவையும் அல்ல யதார்த்தத்தின் பாற்பட்டவையும் அல்ல.

முதலாவதாக நோர்வே அரசானது விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானதொரு நிலைப்பாட்டுடன் செயற்பட்டு வருகின்றதென்பது அபத்தமானதொரு குற்றச்சாட்டாகும். ஒரு பிரச்சினைக்கு மத்தியஸ்தராகச் செயற்படுபவர்கள் எவராயினும் அவர்கள் இருதரப்பையும் சமநிலையில் வைத்து நோக்கவேண்டியது அவசியமானதாகும். அப்பொழுதே பிரச்சினைக்கான தீர்வு எட்டப்படமுடியும்.

நோர்வேயும் இதனையே மத்தியஸ்துவக்காலத்தில் செய்தது. ஆனால், ஜே.வி.பிக்கு புலிகளை /தமிழர்களை நோர்வே சிறிலங்கா அரசுடன் சம அந்தஸ்தில் நோக்கியமை சீற்றத்தைக் கொடுத்தது. இதுவே நோர்வேயை வெளியேற்றிவிட கங்கணம்கட்டி நிற்பதற்கு காரணமாகும்.

அடுத்ததாக புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான நகல்த்திட்டம், புலிகளால் எழுந்தமானத்தில் முன்வைக்கப்பட்டதொன்றல்ல. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல தரப்புக்களுடனும் நன்கு ஆராயப்பட்டு முன்வைக்கப்பட்டதொன்றாகும். அத்தோடு இந்நகல்திட்டத்திற்கு சர்வதேச ரீதியில் வரவேற்பும் இருந்தது. இந்நிலையில் ஜே.வி.பி. இதனை நிராகரிப்பதானது கடந்தகால சமாதான முயற்சிகளின் முன்னேற்றத்தை ஒட்டு மொத்தமாக நிராகரிப்பதற்கு ஒப்பானதாகும்.

மூன்றாவதாக இதுவரை வெற்றிகரமாக அமுல் செய்யப்பட்டு வரும் யுத்தநிறுத்தத்தை நிராகரிப்பதென்பதும், புதியதொரு யுத்தநிறுத்தத்திற்குச் செல்வதென்பதும் அர்த்தமற்றதொன்றாகும். ஏனெனில் தற்போதைய யுத்தநிறுத்த உடன்பாடு நேர்த்தியானதென்பது கடந்த இரண்டாண்டு கால நடைமுறையில் இருந்து உணர்த்தப்பட்டதொன்றாகவே உள்ளது. அத்தோடு சிறிலங்காவின் தேசிய பாதுகாப்பை அச்சுறுத்துவதற்கு அது இடமளித்ததாகவும் இல்லை.

இந்தவகையில், ஜே.வி.பி.யின் படிப்படியான நடவடிக்கைகள் கடந்த இரண்டாண்டு கால யுத்தநிறுத்தம் மற்றும் சமாதான முயற்சிகள் என்பனவற்றிற்கு விரோதமானவையாகவே உள்ளது. இது ஜே.வி.பி. சமாதான முயற்சிகளுக்கு தாம் ஆதரவானவர்கள் என்ற கூற்றிற்கு மாறானதாக மட்டுமல்ல, எதிர்கால அரசியலில் அவ நம்பிக்கையைத் தோற்றுவிக்கத்தக்கதுமாகும்.

# வெளிநாடுகளில் [illegible] திருப்பியனுப்பப்படும் இலங்கையருக்கு உதவ ஐ.நா.ஏற்பாடு

### -2003 இல் 550 பேர் தாயகம் வந்தனர்

(கொழும்பு)

வெளிநாடுகளில் அரசியல் தஞ்சக் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டு நாடு திரும்புவோர்களின் நலன்களைக் கவனிப்பதற்காக யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் உதவி அலுவலகங்கள் திறக்கப்பட்டுள்ளன.

ஐரோப்பிய நாடுகளில் அரசியல் தஞ்சக் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டவர்களை திருப்பி அனுப்பும் போக்கு அதிகரித்துள்ளது.

இதற்கமைய கடந்த வருடம் மட்டும் 550 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என மனித உரிமைகள் அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறானவர்களுக்கு ஆலோசனைகளை வழங்கி நிதி உதவிகளை வழங்கும் போக்கில் தமது அலுவலகங்கள் திறக்கப்படுவதாக ஐ.நா. அபிவிருத்தித் திட்ட உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# அம்பாறை உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை குறித்த தினத்தில் நடத்த முடியாது

### -உயர் நீதிமன்றிற்கு தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்திலுள்ள ஏழு உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை குறித்த தினத்தில் நடத்தமுடியாது என்று தேர்தல் ஆணையாளர் உயர் நீதிமன்றத்திடம் நேற்று அறிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் எதிர் வரும் 27 ஆம் திகதி ஏழு உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடைபெறுவதாக இருந்தது.

இந்த மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தலை இடைநிறுத்தக் கோரிதாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைமீறல் மனுவை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக் கொண்டபோதே தேர்தல் ஆணையாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

2 இலட்சத்து 11ஆயிரம் வாக்காளர் அட்டைகளை விநியோகிக்க வேண்டியுள்ளதாகவும் அதற்கு போதிய அவகாசம் இல்லாதது காரணமாகவும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒத்திவைப்பதாகவும் தேர்தல் ஆணையாளர் உயர்நீதிமன்றத்திடம் நேற்று தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் எதிர் வரும் 21 ஆம்திகதி நடை பெறவுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலின் போது 2002 ஆம் ஆண்டு வாக்காளர் டாப்புக்கமைய வன்செடுப்பை நடத்தக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றதா என்பதுகுறித்து உடன் அறிவிக்குமாறு தேர்தல் ஆணையாளருக்கு கடந்த வெள்ளிக்கிழமை உயர்நீதி மன்றம் உத்தரவிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# சுதந்திரக்கட்சி மீது சேறு பூசிய ஜே.வி.பி.யினர் சந்திரிகாவின் சேலைத்தலைப்பில் இழுபடுகின்றனர்

### அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு சாடல்

(கொழும்பு)

"சுண்ணாம்பும் சுதந்திரக்கட்சியினரும் ஒன்று என்று கூறியவர்கள் இன்று சந்திரிகாவின் சேலைத் தலைப்பில் இழுபடுகின்றனர்." என்று மனிதவள, கல்வி, கலாச்சாரங்களுககுப் பொறுப்பான அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு கூறியுள்ளார். கடுவல பிரதேசத்தில் நடை பெற்ற கூட்டமொன்றில் பேசிய அவர் தொடர்ந்து கூறியதாவது

அன் சமசமாஜக் கட்சியிலிருந்தோர சிறிமாவின் சேலைத் தலைப்பை பிடித்திருந்தனர். அது போல இன்று ஜே.வி.பியினர் சந்திரிகாவின் சேலைத் தலைப்பில் இழுபடுகின்றனர் என்றார்.

அவர் மேலும் பேசுகையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தூர நோக்கு சிந்தனை கொண்ட அரசாங்கத்தில் நாட்டின் பொருளாதாரம் சீரடைந்து மக்களின் வாழ்க்கைத்தரம் முன்னேற்றம் அடைந்து வரும் போது கூட்டணி ஒன்றை அமைத்து சந்திரிகா பாராளுமன்றைக் கலைத்து விட்டார் என குற்றம் சுமத்தினார்.

இந்நாட்டில் குறுகிய காலத்தில் 3 பொதுத் தேர்தல்கள் நடைபெற்றிருப்பதை அவதானிக்கும் வெளிநாட்டவர்கள் சிறிலங்காவை தேர்தல் நாடு எனக்கூறி பரிகசிப்பதை கேள்விப்படுகின்றோம் என்றும்

## கல்வி டிப்ளோமா வகுப்பு

முல்லைத்தீவு ஆசிரியர் கல்வி நிலையத்தில் பட்டப் பின்படிப்பு கல்வி டிப்ளோமா பகுதி II ற்கான வகுப்பு எதிர் வரும் 21.02.2004, 22.02.2004 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளதாக சிரேஷ்ட விரிவுரையாளர் க.சரவணபவன் அவர்கள் அறியத்தருகின்றனர்.

சம்பந்தப்பட்ட ஆசிரிய மாணவர்களைத் தவறாது வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (26)

# திருமலையில் நேற்றுமாலைவரை வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படவில்லை

### - மாவட்டச் செயலர் அறிவிப்பு

திருகோணமலை மாவட்டத்திற்கான பொதுத் தேர்தல் வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்வதற்குரிய ஏற்பாடுகள் திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் செய்யப்பட்டுள்ளன.

நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிவரை வேட்புமனு எதுவும் கையளிக்கப்படவில்லையென்று மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான காமினி ரொட்ரிக்கோ தெரி வித்தார்.

இதேவேளை கந்தளாயைச் சேர்ந்த சுயேட்சைக்குழு ஒன்றின் பேரால் திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டிருப்பதாக தேர்தல் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

# இந்தியா—பாகிஸ்தான் அணிகள் பங்கேற்கும் போட்டிகளின் விபரம் வார இறுதியில் அறிவிப்பு

### –பாதுகாப்பு விடயத்தில் திருப்தி

பாகிஸ்தானில் இந்திய அணி விளையாடவுள்ள போட்டிகளின் அட்டவணை இந்தவார இறுதியில் அறிவிக்கப்படும் என்று இந்திய கிரிக்கெட்சபை கூறியுள்ளது.

15 வருடங்களுக்குப் பின்னர் இந்திய கிரிக்கெட் அணி பாகிஸ்தான் சென்று டெஸ்ட் போட்டியிலும் ஒரு நாள் போட்டியிலும் விளையாடவுள்ளது.

இந்தப் பயணத்திற்கான பாதுகாப்பு அம்சங்கள் குறித்து இந்திய கிரிக்கெட் சபையிலுள்ள மூன்றுபேர் கொண்டகுழு ஒருவாரகாலமாக பாகிஸ்தானில் ஆய்வு நடத்திவிட்டு நேற்று முன்தினம் இந்தியா திரும்பியுள்ளது.

சர்ச்சைக்குரிய கராச்சி உட்பட ஆறு மைதானங்களை இக்குழு பார்வையிட்டுள்ளது. பாகிஸ்தான் கிரிக்கெட்சபைத்தலைவர் மற்றும் அந்நாட்டின் பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடனும் ஆலோசனை நடத்தியும் உள்ளார்கள்.

தங்களுடைய ஆய்வு குறித்து இந்திய மத்திய உள்துறை அமைச்சிடம் இக்குழு அறிக்கை சமர்ப்பிக்கவும் உள்ளது.

இதேநேரம் இந்திய குழுவின் ஆய்வு குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை திருப்தி வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தான் செல்லும் இந்திய கிரிக்கெட் வீரர்களுடன் இந்திய அதிரடிப்படையினர்களை அனுப்பி வைக்கவும் இந்திய கிரிக்கெட்சபை முடிவு செய்துள்ளது என்றும் கூறப்படுகின்றது.

# மிகுந்த சவாலுக்கு முகம்கொடுப்போம்

### -வி.வி.எஸ்.லக்ஸ்மன்

பாகிஸ்தான். அணி வலுவான நிலையிலுள்ளது. டெஸ்ட், மற்றும் ஒருநாள் போட்டிகள் இந்தியாவுக்கு மிகுந்த சவாலாக இருக்கும் இவ்வாறு இந்திய கிரிக்கெட் அணியின் வீரர் வி.வி.எஸ்.லக்ஸ்மன் கூறியுள்ளார்.

லக்ஸ்மனின் திருமண வைபவத்தில் செய்தியாளர்கள் பாகிஸ்தானுடன் விளையாடவுள்ளது பற்றி கேள்வி கேட்டபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அத்துடன் சவாலை எதிர்கொண்டு இந்தியா வெற்றிவாகை சூடும் எனும் நம்பிக்கையும் தமக்கு இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.



# புலிகள் மீதான தடைநீக் ... தான் தீர்மானிக்கும் யாழ். சென்ற இந்திய ராஜ்ய சபை உறுப்பினர் கூறுகின்றார்

(யாழ்ப்பாணம்)

"தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடைநீக்கத்தினை எதிர் வரும் காலம் தான் தீர்மானிக்கு மென" இந்திய இராஜ்ய சபை உறுப்பினரான எட்வோடோ பெலறோ தெரிவித்துள்ளார். நேற்று குடா நாட்டிற்கான தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு வருகை தந்திருந்த அவர் முன்னதாக யாழ். அரச அதிபர் செ.பத்மநாதனை கச்சேரியில் சந்தித்துப் பேச்சுக் களை நடத்தினார்.

காங்கிரஸ் கட்சியின் இராஜ்ய சபை உறுப்பினரான இவர் இந்தியா வின் முன்னாள் வெளிவிவகார பிரதி அமைச்சராகவும் இருந்திருந்தார். யாழ். செயலகத்தில் நேற்றுக்காலை 11.00, மணியளவில் இடம்பெற்ற இச்சந்திப்பில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் மற்றும் பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் ந.சிவபாதம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன் பின்னர் பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றிய அவர் விடுதலைப்புலிகள் மீதான தடைநீக் கம் தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கை யிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டே யாழ்ப்பாணம் வந்துள்ளதாக தெரிவித்த அவர் அரசியல் பிரச்சினை தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்க மறுத்துவிட்டார்.

இதனிடையே கல்விவளர்ச்சியில் குடாநாடு போதிய முன்னேற்றங் கண்டுள்ளதாக உலகமயமாதல் துறையில் மேலும் போதிய முன் னேற்றமடைய வேண்டுமெனவும் தெரிவித்தார். பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்த அவர் வைத்தியசாலையின் தேவை கள் தொடர்பாக நிர்வாகத்துடன் பேச்சுக்களை நடாத்தினார்.

அதைத்தொடர்ந்து நல்லூர் ஆலயத்திற்கு விஜயம் செய்த அவர் நல்லை குருமகா சன்னி தானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரப்பரமாச் சாரிய சுவாமிகளையும் சந்தித்து உரையாடினார்.

இறுதியாக யாழ். ஆயர் இல்லத் திற்கு விஜயம் செய்த அவர் அதி வணக்கத்திற்குரிய தோமஸ் சௌந்தரநாயகம் அவர்களையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியி ருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழக மீனவர் 67 பேர் யாழ். சிறையில் விடுதலை கோரி உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர் 67 பேரும் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டமொன்றை கடந்த திங்கட்கிழமை முதல் ஆரம்பித்துள்ளனர்.

தம் மீதான வழக்கு விசாரணை களை துரிதப்படுத்தக் கோரியும், விசாரணைகளின்றி தடுத்து வைக் கப்பட்டுள்ளோரை விடுவிக்கக் கோரியுமே இப்போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

இதனிடையே இவர்களது சாகும் வரையான உண்ணாவிரதப் போராட் டத்தினால், வழக்கு விசாரணைக ளுக்கு நீதிமன்றங்களில் இவர்களை ஆஜர்படுத்த முடியாதிருப்பதாக சிறைச்சாலை நிர்வாகம் யாழ். மாவட்டத்திலுள்ள நீதிமன்றங் களுக்கு அறிவிப்பொன்றை நேற்று அனுப்பி வைத்துள்ளது.

இலங்கைக் கடற்பரப்பினுள் குடா நாட்டை அண்டிய பகுதிகளில் அத்து மீறிப் பிரவேசித்து மீன்பிடித் தொழி லில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே இவர்கள் பிடிக்கப்பட்டிருந்தனர். இலங்கை கடற்படையினராலும், உள் ளூர் மீனவர்களாலும் பிடிக்கப்பட்டி ருந்த இந்திய மீனவர்களில் பெரும் பாலானோர் விடுவிக் கப்பட்டிருந்த போதும், படகுகளின் ஓட்டிகளான மேற குறித்த 67 பேரும் யாழ். சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 16 இந்திய மீன்பிடிப் படகுகளின் ஓட்டிகளுக்கெதிராக, யாழ். மேல் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு விசாரணை கள் இடம்பெற்று வருகின்றன. எனினும், எஞ்சிய மீன்பிடிப் படகு களது ஓட்டிகள் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோ சனைகளுக்காக நீதிமன்றங்கள் காத்திருக்கின்றமை குறிப்பிடத் தக்கது. (27)

# வடமராட்சிக் கடலில் இந்.மீனவரின் அத்துமீறல் மீண்டும் அதிகரிப்பு

## மீனவர்கள் குற்றச்சாட்டு

(வடமராட்சி)

வடமராட்சிக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் இந்திய மீன்பிடிப் படகுகளின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்திருப்பதாக மீனவர்களால் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

கடந்த வாரம் இவ்வாறு அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த இந்திய மீன்பிடிப் படகுகள் ஐந்து உள்ளூர் மீனவர்களால் பிடித்து வரப்பட்டிருந்ததையடுத்து குறைந்திருந்த நடமாட்டம் மீண்டும் தற்போது அதிகரித்துள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆயினும் மீண்டும் அதிகரித்துள்ள இந்தியப் படகுகளின் நடமாட்டத்தை கடற்படை கட்டுப்படுத்தாவிட்டால் பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகளை தாங்கள் மீண்டும் முன்னெடுக்கப் போவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## போர்....

தேர்தல் முடிவடைந்த பின்னர் மீண்டும் ஒரு யுத்தம் வரலாம் என்ற அச்சம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. இதனை நீக்க நாட்டு மக்கள் மிகவும் பலமான ஒரு அரசாங்கத்திற்கு அத்திவாரம் இடும் நோக்குடன் எனது ஐ.தே. கட்சிக்கு தமது அங்கீகாரத்தை வழங்கவேண்டுமென பிரதமர் கோரியுள்ளார். (32)

## சந்திரசேகரன்...

ணித் தலைவர் மனோகணேசனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இச்சந்திப்பில் தற்போது ஏற்பட் டுள்ள அரசியல் நிலை பற்றியும் நடைபெறவுள்ள தேர்தலில் தமிழ் மக்களின் அபிலாசைகளை எதிர் பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யும் வகையில் எவ்வாறு செயற்படுவது என்பன உள்ளிட்ட பல்வேறு விட யங்கள் தொடர்பாகவும் ஆராயப் படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (லோ)

## சுயாட்சி...

அது வெளியிடப்படுகின்ற பொழுது என்ன கொள்கையின் அடிப்படை யில் நாங்கள் தேர்தலினை எதிர் நோக்குகின்றோம். என்பது வெளிக் கொணரப்படும். கடந்த தேர்தல் விஞ்ஞாபனத்திற்கும் இந்தமுறை தேர்தல் விஞ்ஞாபனத்திற்குமுள்ள வித்தியாசம்?

கடந்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் திம்புக்கோட்பாட்டை முன்வைத்து நாங்கள் போட்டியிட்டோம். தற்போது நடைபெறவுள்ள தேர்தலில் நாங்கள் ஒருதனித் தேசிய இனம். எங்க ளுக்கு ஒரு தாயகம்இருக்கிறது. எமக்கு சுயாட்சிக்கு உரித்துண்டு என்ற அடிப்படையில் அதுபோன்ற விடயங்களை மேலதிகமாக விளக்கி தமிழீழ விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால சுயாட்சி சம்பந்தமான தயாரிப்பு, அவ்விதமான விடயங்களை உள்ள டக்கி எங்களுடைய கொள்கை யினை மக்களுக்குத் தெளிவாக விளக்கக்கூடிய வகையிலும் மக்கள் அந்தக்கொள்கையின் அடிப்படை யில் ஒரு உறுதியான தீர்வினை வழங்கக் கூடிய வகையிலும் இவை தேர்தல் விஞ்ஞாபனமாக அமையும்.

* வேட்பாளர் பட்டியலில் புதிய முகங்களுக்கு சந்தர்ப்பம் கிடைக் குமா?

கூட்டமைப்பின் நான்கு கட்சி களும், விடுதலைப்புலிகளும் இது குறித்து வெளிப்படையாக நாங்கள் பேசியிருக்கின்றோம். இது சம்பந் தமாக விரைவில் முடிவெடுக்கப் படும். நிச்சயமாக புது முகங்கள் உள்ளடக்கப்படும்.

* மட்டக்களப்புப் பகுதியில் அறிவிக்கப்பட்ட பட்டியலில் முஸ் லிம் பிரதிநிதிகள் எவரும் இடம் பெற்றிருப்பதாகத் தெரியவரவில்லை இதுகுறித்து?

மட்டக்களப்பில் பட்டியல் இன் னும் அறிவிக்கப்படவில்லை. ஆனால் வடகிழக்கு மாவட்டங்களில் சமர்ப்பிக்கப்படும் பட்டியல்களில் முஸ்லீம் வேட்பாளர்கள் உள்ளெடுக் கப்படுவார்கள் என்றார். (சோ)

## எங்கள்...

என்பதிலும் எங்களுக்கு ஒத்த கருத்துக்கள் நிலவின அது மிகவும் வரவேற்கத்தக்கதொன்று. இவை நிறைவைத் தந்துள்ளது என்றார். அடுத்து செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில்

* எதிர்வரும் தேர்தலில் எந்தச் சின்னத்தில் கூட்டமைப்பினர் போட்டியிடவுள்ளனர்?

இது சம்பந்தமாக அவர்களுடன் நாங்கள் கருத்துக்களைப் பரிமாறி யிருக்கிறோம். இறுதிமுடிவை நிச்சயம் மிகவிரைவில் வெளி விடுவோம்.

நாங்கள் இணக்கப்பாடு கண்டி ருக்கின்றோம். ஆனால் தமிழ் கூட் மைப்பினர்கள் சந்தித்து வேறு விடயங்கள் சம்பந்தமாக ஆராய இருக்கின்றனர். ஏனைய ,பலவிட யங்களும் பூர்த்திசெய்ய வேண்டி இருக்கின்றமையால் அதில் நாங்கள் அதில் இணக்கப்பாடு கண்டிருக் கிறோம். அவை சம்பந்தமாக நீங்கள் விரைவில் எதிர்பார்க்கலாம்.

*புதுமுகங்கள் போட்டியாளர் களாக நிறுத்தப்படுவார்களா?

நிச்சயமாக இருக்கின்றார்கள். ஆனால் அந்த நேரத்தில்தான் அந்தச் செய்திகளை அறியலாம்.

* தனி நபர்களுக்கு வாக்களிப்பா? அல்லது கொள்கைகளுக்கு வாக்க ளிப்பா?

இந்தமுறை தமிழ் கூட்டமைப் பினரும், நாங்களும் பேசிக்கொண்ட வகையில் எங்களுடைய தலைவ ரின் எதிர்பார்ப்பும், தலைமைப்பீடத் தினதும் எதிர்பார்ப்பும் அதுதான் எல்லோரும் நாங்கள் கொள்கை ரீதியாக ஒன்றுபட்டு நிற்பதென்று தான் முடிவெடுத்திருக்கின்றோம்.

இதில் எந்தவித கருத்துவேறு பாடுமில்லாது எல்லோரும் முழு அளவில் மனதார ஒத்துக் கொண் டுள்ளனர். கொள்கைக்காகவே நாங்கள் எங்களை அர்ப்பணித்திருக் கிறோம் என்பதனை மிகத்தெளிவாக உறுதியாக முடிவுகளை தெரிவித் திருக்கிறார்கள் நாங்களும் தெரிவித்திருக்கிறோம்.

* தேர்தல் பரப்புரைகளில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் ஈடுபடுவார்களா?

தமிழீழ விடுதலைப் புலிகள் இந்தத்தடவை நேரடியாக பாராளு மன்ற பிரதிநிதித்துவத்திற் குப் போட்டியிடவில்லை. ஆனால் கொள்கை ரீதியாக தமிழ் மக்களுடைய அபிலாசைகளை வெளிப்படுத்துகின்ற ஒரு தேர்தலாக தமிழ் மக்கள் மாற்றியமைக்க விரும்புகின்றார்கள்.

அதாவது தமிழ் மக்கள் எந்த இலட்சியத்திற்காக எந்த கொள் கைக்காக ஒன்றுபட்டு ஒரு தலை மைத்துவத்தின் கீழ் நிற்கின் றார்களோ, அதை இம்முறை தமிழ் மக்கள் சர்வதேச சமூகத்திற்கு நிலை நிறுத்துவதற்கான ஆயத்த ஏற்பாட்டுடன் இருக்கின்றமையினால், அந்த அடிப்படையில் தேசியக் கூட்ட மைப்பும் நாங்களும் ஒன்றிணைந்தி ருக்கின்றோம். அந்த வகையில் எங்க ளின் முழுப்பங்களிப்பும் ஆதரவும் இருக்கும்.

* மலையக மக்கள் முன்னணி கூட்டமைப்புடன் இணைவது பற்றி?

இது குறித்து இன்று நாங்கள் பேசவில்லை, மலையக மக்கள் முன்னணி, மேல்மாகாண மக்கள் முன்னணி போன்ற கட்சிகளுடன் பேசிய பின்பு தான் அதுகுறித்து தமிழ்க் கூட்ட மைப்புடன் விவாதிப்போம்.

விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதியில் தேர்தல் வாக்க ளிப்பு நடைபெறுமா இல்லையா என்பது தொடர்பாக?

இதுபற்றிய விடயங்களை நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் அதன் தலைவர் சம்பந்தன் ஐயாவுடனும் பேசியுள் ளோம். எங்களைப் பொறுத்தவரை யில் ஒட்டு மொத்த தமிழ் மக்களும் இந்தமுறை தங்களது அபிலாசை களை வெளிப்படுத்தவுள்ளனர். ஆகவே அதற்கான சாத்தியப் பாடான சூழ்நிலையை ஆராயும்படி தலைவர் பணித்திருக்கின்றார். நாங்கள் இது சம்பந்தமாக சம்ப ர் ஐயாவுடனும் ஏனையோருடனும் கதைத்துள்ளோம். அதிலே உள்ள சட்டப்பிரச்சினைகள், வாய்ப்புக்கள் சம்பந்தமாக ஆராய்ந்த பின்னர் அது சம்பந்தமாகத் தெரிவிப்போம்.

*வடக்கு-கிழக்கில் பெரும் பான்மை இன சார்பு கட்சிகளில் போட்டியிட முடியாது என்று கூறினீர்கள்?

இது மிகவும் தவறான செய்தி. அதாவது, பெரும்பான்மைக் கட்சி கள் போட்டியிடக் கூடாதென் றில்லை. அதிலே செய்தியை நீங்கள் வடி வாக வாசிக்க வேண்டும். அதாவது, தமிழ் மக்கள் பெரும் பான்மை இனக் கட்சிகளை விரும்ப வில்லை. போட்டியிடக் கூடதென்று நிபந்தனை விதிப்பதற்கு அப்படியொரு அதிகாரமும் எங்களுக் கில்லை.

*முன்னாள் அமைச்சர் மகேஸ் வரன் கூட்டமைப்பில் இணைவது பற்றி?

அவரது பேட்டியை நீங்கள் கேட்டால் இதைக் கேட்கத் தேவை யில்லை. அவர் பி.பி.சி.யில் தெளி வாகச் சொல்லியுள்ளார். தமிழ் மக்கள் இந்தத் தடவை ஒன்றுபட்டு ஒரே தலைமைத்துவத்தின் கீழ் தங்களுடைய அபிலாசைகளை ...ரிப்படுத்தி இருக்கின்றார்கள். ...காக நான் கௌரவமாக ...ருந்து விலகிக் கொள்கிறேன் ...சொல்லியுள்ளார்.

...மைப்பின் சார்பில் மகேஸ் ...ரனும் போட்டியிடுவார் என்று தகவல்கள் வெளியாகின்றன. இது பற்றி?

கூட்டமைப்பு சார்பாக அவருக்கு நாங்கள் இடம்கொடுக்கிறதில் எல்லோரும் ஒருமைப்பாட்டோடு இருக்கின்றார்கள். ஆனால், அவர் தான் ஒதுங்குவதாகவே அறிவித் துள்ளா

ஆனந்த சங்கரியின் பிளவு கூட்ட மைப்பிற்குள் பாதிப்பை ஏற்படுத் துமா?

அதை மக்கள் தீர்மானிப்பார்கள்.

* விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் தேர்தல் பிரசாரங்களுக்கு இடமளிக்கப்படுமா?

நிச்சயமாக இருக்கின்றது தமிழ் மக்கள் இம்முறை ஒன்றுபட்டு தங்களுடைய அபிலாசைகளை வெளிப்படுத்த இருக்கின்றார்கள். அந்த அடிப்படையில் மக்களிடம் கருத்தினைச் சொல்லுகின்ற

* வேட்பு மனுத்தாக்கல் எப்பொழுது நடைபெறும்?

தமிழ் கூட்டமைப்புக்கூடி திகதியினை முடிவெடுக்கும் என்றார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் தமிழீழ கூட்டமைப்பினருக்கு மிடையிலான சந்திப்பு நேற்று கிளிநொச்சி தமிழீழ அரசியல் துறை செயலகத்தில் நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தலைமையில் யாழ். மாவட்ட வவுனியா, திருமலை, மன் னார் அரசியல் துறைப்பொறுப் பாளர்களும் கூட்டமைப்பின் தலை வர் இரா.சம்பந்தன் தலைமையில் கூட்டமைப்பின் 4 கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற அங்கத்த வர்கள் மற்றும் கட்சி செயலர்களும் கலந்து கொண்டனர்.

இரண்டு மணிநேரம் நடைபெற்ற மேற்படி சந்திப்பின் போது தற்போது நடைபெறவுள்ள தேர்தல் முன்னெ டுப்புக்கள் சம்பந்தமாக முக்கியமாக கலந்துரையாடப்பட்டுள்ளது. (சோ)

## ஐ.ம.சுதந்திர....

தம் கொண்டுவரப்படவேண்டு மானால் அதில் சம்பந்தப்பட்ட இர தரப்பும் இணங்க வேண்டும். அவ வாறு இல்லையெனில் உடன் பாட்டில் திருத்தத்தைக் கொண்டுவர முடியாது என அமைச்சர் பீரிஸ் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகள் தொடர்பான ஊடக மாநாட்டில் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மக்கள் விடுதலை முன்னணியின் பிரச்சார செயலாளர் விமல் வீரவன்ச போர்நிறுத்த உடன்பாடு தொடர்பாக உள்ளூர் நாளிதழ் ஒன்றிற்கு செவ்வியளித்திருந்தார்.

அதில் போர்நிறுத்த உடன்பாடு தாம் ஆட்சிக்கு வந்தால் புதிதாக செய்து கொள்ளப்பட வேண்டும் என்ற கருத்தை அவர் வெளியிட் டிருந்தார். தாம் சமாதானத்தில் உறுதியாக இருப்பதாகவும் மக்கள் பயம் கொள்ளத் தேவை இல்லை எனவும் குறிப்பிட்டிருந்தார்.


விசுவமடுவிவசாயிகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

கிளைக்குழு தெரிவுக்கானகிளைப் பொதுக்கூட்டம்-கிளை இல.04.

௨004.0௨.14 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவிருந்த கிளைக்குழு தெரிவுக்கான கிளைப் பொதுக்கூட்டம், அங்கத்தவர்கள் சமுகமின்மையால், நடைபெறவில்லை. எனவே, மேற்படி கிளைக்குழு தெரிவுக்கான கிளைப் பொதுக்கூட்டம், எதிர்வரும் ௨004.0௨.௨௨ ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை,9.00 மணிக்கு பிரமந்தனாறு சித்திவிநாயகர் ஆலயமுன்றலில் நடைபெறும் என்பதை சகல அங்கத்தவர்கட்கும் அறியத்தருவதுடன், கிளை அங்கத்தவர்கள் கூட்டத்திற்கு சமுகம் கொடுத்து, தெரிவை மேற்கொள்ளுமாறும் அன்புடன் அறியத்தரு கின்றோம்.

15.02.2004.

(சி-9095)

செயலாளர்,
வி.வி.ப.நோ.கூ.சங்கம்,
விசுவமடு.


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2 ... ் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.